போன் நெ: 15. | விலை 2 அணா | REGD. NO. 4 641

திராவிடநாடு

மலர் 12 | 21—2—54 | இதழ் 34

"நான் ஒரு ஏழைப் பாட்டாளி!"

[அடிகள்]

★

"நான் உங்களைச் சேர்ந்தவன். தவறாக என்னை அவர்கள் பட்டியலில் சேர்த்துவிடாதீர்கள். பார்ப்பதற்கு நானும் அவர்களைச் சேர்ந்தவன்போல்தான் தெரியும் (உண்மையும் அதுதான்) என்றபோதிலும், என்னை உங்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளுங்கள். காரணம், நானும் உங்களைப்போன்ற ஒரு முழுநேர உழைப்பாளி எனவே, கையால் உழைக்காத அந்தக் கயவர்களோடு என்னையும் சேர்த்துவிடாதீர்கள். உங்களைவிட நான் அதிகம் உழைக்கிறேன்—எழுபது வயதைத் தாண்டிய இந்தத் 'தள்ளாத' காலத்திலும், உங்களைவிட அதிகம் உழைக்கிறேன் என்பது உங்களுக்குத்தெரியாது—உங்கள் தலைவருக்குத் தெரியும். உங்களுக்காக நான் இங்கு வரவில்லை. உங்கள் தலைவர் அழைத்தார்—வந்தேன். எனவே, என்னை உங்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுங்கள். நான் சொன்னால் நம்பமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு முழுநேர உழைப்பாளிதான் — உங்கள் தலைவரைக் கேட்டுப் பாருங்கள்."

* * *

14—2—54-ல் கருவூரை அடுத்த வெண்ணெய் மலையில் நடைபெற்ற தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்திற்குச் சென்று திரும்பும்போது, அவருடைய முழுநேர உழைப்பைக் கருவூரிலும், திருச்சியிலும், சீரங்கத்திலும் செய்து காட்டினாரே ஆச்சாரியார், அவர்தான் நாம் மேலே தந்துள்ள கருத்தை அடிப்படையாக வைத்துப் பேசியுள்ளார்.

மூட்டை தூக்கியும், கல் உடைத்தும், கைவண்டி இழுத்தும், விறகு வெட்டியும் கஷ்டப்படும் கை உழைப்புத் தொழிலாளி இருக்கிறானே, அவனைவிட அதிக கஷ்டப்பட்டு உழைக்கிறாராம் ஆச்சாரியார்! நெற்றி வியர்வை நிலத்திலே வடியக் கஷ்டப்பட்டாலும் கால் வயிற்றுக்குக்கூட எட்டாத கஞ்சியைக் குடிக்கிறானே, அவனைவிட அதிக கஷ்டப்பட்டு உழைக்கிறாராம் இந்தக் கனபாடி! ஒண்டக் குடிசையின்றி ஓட்டாண்டியாய்த் திரியும் ஒரு உழைப்பாளி, தரையே மெத்தையாகவும், வானமே கூரையாகவும் அமைக்கப்பட்டுள்ள 'அலங்கார' மாளிகையில், கையதுகொண்டு மெய்யது போர்த்திக் காலது கொண்டு மேலது மூடிக் கனஜோராய்த் தூங்கியெழுந்ததும், ஒரு கையில் கலயமும் இன்னொரு கையில் மண்வெட்டியோ கோடரியோ ஏதாவதொரு உழைக்கும் கருவியும் எடுத்துக்கொண்டு, எங்கே வேலை கிடைக்கும், யார் கஞ்சி ஊற்றுவார்கள் என்று எதிர்பார்த்தபடி தெருத் தெருவாய் அலையும் நிலைக்கு ஆக்கப்பட்டிருக்கிறானே தொழிலாளி, அவனைவிட அதிக கஷ்டப்படுகிறாராம், இந்த டபுள் ஊதியம் பெறும் பட்டாச்சாரியார்! ஆயிர ரூபா பென்ஷனும், இரண்டாயிரத்துக்கு மேல் சம்பளமும் அலவன்ஸ் உட்பட வாங்கும் இந்த 'வறியவர்' ஒரு பாட்டாளியாம்! இப்படி ஆயிரக்கணக்கில் ஊதியம் பெறும் இந்தப் 'பரம ஏழை'க்கு ஏற்படும் சாப்பாட்டுச் செலவிருக்கிறதே! அதை அளவிட முடியாது என்றால் விளங்குகிறதா? அளவிட்டுக் கூறுவதற்கு ஒன்றுமே இல்லை. அப்படியென்றால், சாப்பாட்டுக்கென்று இவர் ஒரு தம்பிடி கூடச் செலவிடுவதில்லை என்று பொருள். சாப்பாட்டுக்காகத் தம்பிடி கூடச் செலவிடாமல் மனுஷன் எப்படி உயிர் வாழ்கிறார் என்று கேட்கத் தோன்றும் எவருக்கும். இலவச உணவு உட்கொள்வதிலே அவருக்கு ஒரு தனிப்பிரியம். இலவச உணவென்றால், சாதாரணமான உணவல்ல. பக்தியும் மரியாதையும் கலந்து பக்குவம் செய்யப்பட்ட சுவைமிக்க இலவச உணவு. அதிலும் விதவிதமான 'சுவையுடைய உணவு—இன்றொரு இடத்தில், நாளை வேறிடத்தில், மறுநாள் இன்னொரு இடத்தில் என்று இப்படி ஊர்தோறும் அவருக்கு உணவு விடுதிகள். சுற்றி வளைத்துப் பேசுவானேன். ஆசாமி வீட்டில் தங்கு

வதில்லை, எனவே அவருக்குச் சாப்பாட்டுச் செலவில்லை என்று பொருள். அமைச்சருக்கழகு அலைந்து திரிவது என்ற புதுமொழிக்கேற்ப, ஆச்சாரியார், ஊர் சுற்றுவதைத் தவிர வேறு எந்த முறையைக் கையாண்டாலும் தம்முடைய பதவி நிலைக்காதென்பதை நன்குணர்ந்தவராதலால், ஆங்காங்கும் சென்று தம்மை ஆதரிக்கும்படி மக்களை வேண்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார். எனவே அவருக்குச் சாப்பாட்டுச் செலவு மிச்சமாவதோடு, செலவற்ற வருவாயைத் தரும் பதவியும் நிலைத்துவிடுகிறது.

பதவிப் பிச்சைக்காகப் பவனி வரும் இவருக்கு ஆங்காங்கு உணவுப் பிச்சையும் தானாகக் கிடைத்துவிடவே, உல்லாச உபதேசம் புரிய ஆரம்பித்துவிடுகிறார். நான் யார் தெரியுமா? நானும் உங்களைப் போன்ற ஒரு கையுழைப்புப் பாட்டாளிதான் — என்னையும் உங்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளுங்கள். கையால் உழைக்காத அந்த முதலாளி வர்க்கத்தில் என்னையும் சேர்த்தால் அது மாபெருந் தவறாகும் என்று, அலைந்து திரிந்தாவது அமைச்சர் பதவியைக் காப்பாற்றித் தீரவேண்டிய கஷ்டமான காரியத்தைச் செய்துவரும் ஆச்சாரியார், அன்றாடம் உழைத்தாலும் அரை வயிற்றுக் கஞ்சியும் கிடைக்கவில்லையே என்ற நிலையில் இருந்து அவதிப்படும் பாட்டாளி மக்களைப் பார்த்து, நானும் உங்கள் இனத்தைச் சேர்ந்தவன்தான் என்று உரத்த குரலில் பேசுகிறார். இல்லை, இல்லை! உழைப்பாளி வர்க்கத்தைப் பார்த்துக் கிண்டல்செய்கிறார். நகத்தில் அழுக்குப்படாமல் வாழும் சுகவாசி ஒருவன் நாள் முழுவதும் நாய்போல் உழைக்கும் ஒரு பாட்டாளியைப் பார்த்து நானும் உன்னைப் போன்ற ஒரு உழைப்பாளிதான் என்று கூறினால், அவனைப் பற்றி என்ன எண்ணுவீர்கள்? நாட்டை ஏய்த்துப் பிழைக்கும் இதனைப்போன்ற ஒரு நயவஞ்சகனை நானிலத்தில் எந்தப் பகுதியிலும் காணமுடியாது என்று தான் கூறுவீர்கள்.

டால்மியா என்ற வடநாட்டு முதலாளியின் பெயரால் அழைக்கப்படும் கல்லக்குடியில் 15—2—54ல் பேசியபோதுதான் ஆச்சாரியார், அங்குள்ள சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் முன்னிலையில் நாம் மேலே குறிப்பிட்டிருப்பதுபோல் பேசியிருக்கிறார். தொழிலாளர்களில் தன்னையும் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்ட ஆச்சாரியார், தொழிலாளர்களுக்குச் சில உபதேசங்களையும் கூறியிருக்கிறார். அதாவது, முதலாளிகளுக்கு விரோதமாக எந்தக் காரியத்தையும் தொழிலாளர்கள் செய்யக் கூடாதென்று தொழிலாளர்களில் ஒருவரான தோழர் ஆச்சாரியார் தம்முடைய சகாக்களுக்கு உபதேசம் செய்கிறார்.

தொழிலாளர்கள் சங்கத்திற்கு ஒரு கட்டிடம் கட்டுவதற்கு முதலாளி பணமோ சாமான்களோ கொடுத்திருப்பதைக் குறிப்பிட்டு,

> “இக் கட்டிடம் கட்டுவதற்கான சாமான்களைக் கொடுத்து உதவிய மானேஜ்மெண்டாருக்கு நன்றியுடன் நடப்பது திருவள்ளுவரின் பக்தர்கள் என்று சொல்லிக்கொள்ளும் உங்களுடைய கடமையாகும்”

என்று பேசியுள்ளார். தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதன் அறிகுறியாக ஒரு கட்டிடம் கட்டி, அதில் தொழிலாளர்கள் அவ்வப்போது கூடித் தங்கள் குறைகளை நிவர்த்திப்பதற்கு வழிவகை தேடுவதே அதன் நோக்கமாகும். முதலாளி சரிவர நடந்தால், தொழிலாளி தன் குறை களையத் தனிக் கட்டிடம் அமைக்கமாட்டான் என்பது ஒருபுறமிருக்க, முதலாளி பணம் கொடுத்தான் என்பதற்காக, அவன் செய்யும் எந்த அநியாயத்தையும் தொழிலாளி பொறுத்துத், திருவள்ளுவரைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்று நல்லுரை வழங்கும் ஆச்சாரியாரின் போக்குத்தான் நமக்குப் புரியவில்லை. தொழிலாளர்கள் முதலாளிக்குச் செய்யவேண்டிய கடமையை, வள்ளுவரைச் சாட்சிக்கிழுத்துச் சங்கநாதம் எழுப்பி வற்புறுத்தியவர் அதோடு நிற்கவில்லை. வற்புறுத்தியது போதாதென்று எச்சரிக்கையும் செய்திருக்கிறார்.

> “மானேஜ்மெண்டாருக்கு விரோதமாக எதாவது செயல் திட்டம் நீங்கள் இக்கட்டிடத்தில் வகுக்கும்பொழுது, இக்கட்டிடத்தின் ஒவ்வொரு கற்களும் உங்களுடைய நன்றியை ஞாபகப்படுத்தும்”

என்ற பயங்கரமான எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார். வெண்ணெய் மலையில் தன்னுடைய முதலாளிக்கு நல்ல பிள்ளையாக நடந்து, தற்காலிகமாகவாவது தன்னுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதில் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவோ என்னவோ ஆச்சாரியாரை இவ்விதமெல்லாம் பேசச் செய்திருக்கிறது. இது பேச்சா அல்லது பிதற்றலா என்று எண்ணுமளவுக்கு அவர் வார்த்தைகளை படியில்லாமலே அள்ளிக் கொட்டியிருக்கிறார். கடமையை வற்புறுத்தி, எச்சரித்ததோடு அவர் நின்றுவிடவில்லை. “உங்களுடைய முதலாளி இருக்கிறாரே! அவர் எப்படிப் பட்டவர் தெரியுமா? ரொம்பவும் நல்ல மனிதர்! நியாயப்படி நடப்பவர்” என்று கூறி அப்படிப்பட்டவரிடத்தில் நீங்கள் மிகவும் ஜாக்ரதையாக நடந்துகொள்ள வேண்டும் — இல்லையேல் என்ன நடக்கும் தெரியுமா என்று மிரட்டுவதுபோல் பேசியிருக்கிறார், தொழிலாளர்களில் தானும் ஒருவன் என்று கூறிக் காமிக் அடிக்கும் அந்தப் பரம ஏழைத் தொழிலாளியாம் ஆச்சாரியார்.

தொழிலாளர்களை மிரட்டி, அவர்களை டால்மியாவிடத்தில் நல்லபடி நடக்கவேண்டுமென்று எச்சரிப்பதற்காகமட்டும் ஆச்சாரியார் தோழர் டால்மியாவுக்கு நல்ல பிள்ளைச் சர்டிபிகேட் வழங்கவில்லை. அதற்கு வேறொரு முக்கியமான காரணமும் உண்டு.

டால்மியாபுரம் என்ற வடநாட்டுப் பெயரை எடுத்துவிட்டுப், பழந்தமிழ்ப் பெயரான கல்லக்குடி என்ற பெயரையே அந்த இடத்துக்கு வைக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்யும் நம்மையும் (தி. மு. க.) அவர் எச்சரிக்கிறார். டால்மியா என்றால் யார் தெரியுமா? இதோ நான் அவருக்கு வழங்கியிருக்

கும் நன்னடத்தைச் சர்டிபிகேட்! இப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதனுடைய பெயரை மாற்ற வேண்டுமென்று கிளர்ச்சி செய்வது ஆகாது என்று கூறாமல் கூறுகிறார் குல்லுகத்தன்மையிலும் தில்லுமுல்லுக் காட்டும் கீதாசிரியர்.

டால்மியாவுக்கு நல்ல பிள்ளைப் பட்டம் வழங்கவந்த அவசரத்தில் நாம் நடாத்தும் பெயர் மாற்றக் கிளர்ச்சியையும் குறிப்பிட்டு, அரசியல் நோக்கோடு இக்கிளர்ச்சி செய்யப்படுகிறதே தவிர, உண்மையில் பெயர் மாற்ற வேண்டுமென்பதில் அவர்களுக்கு (தி. மு. க.) அக்கரை இல்லை என்ற தோரணையில் பேசி இருக்கிறார். ஆச்சாரியார்மீது ஏதாவதொரு துவேஷத்தைக் கிளப்புவதற்காகச் செய்யப்படும் கிளர்ச்சியாம் அது. ஆச்சாரியார்மீது நாம் ஏன் துவேஷம் கொள்ளவேண்டுமென்பது நமக்குமட்டுமல்ல, யாருக்குமே புரியாத புதிர். ஆச்சாரியார் மீது துவேஷம் கொள்ளக்கூடிய அளவுக்கு நமக்கும் அவருக்கும் இடையே இருக்கிற நெருங்கிய தொடர்பு என்ன? அவர் நமக்குப் பங்காளியுமல்ல — பகைவனுமல்ல. வேண்டுமானால், அவர் நமக்கு நண்பராக இருக்க நாம் அனுமதிப்போமே தவிர, எந்தக்காரணத்தைக் கொண்டும் ஆச்சாரியார் என்ற தனிப்பட்ட நபர்மீது நாம் துவேஷம் பாராட்டக் காரணமே இல்லை. அரசியலில் அவர் செய்யும் பித்தலாட்டங்களைக் கண்டிப்பதோ, அவற்றை நாடறியும்படிசெய்வதோ ஒருக்காலும் துவேஷமாகாது.

அவருடைய புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் அவருடைய பித்தலாட்டங்களில் ஒன்று. அதை நாம் கண்டிக்கிறோம்—அது ஒழியவேண்டுமென்பதற்காகக் கிளர்ச்சியும் செய்கிறோம். இது எப்படித் துவேஷமாகும்? பேசுவதற்கு மேடை கிடைத்து விட்டால் போதும், ஏதாவதொன்றை உளறிக் கொட்ட வேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்கு ஆளானவர்களைத் தவிர, மனிதப் பண்பு படைத்த எவருமே இவ்விதம் பேசமாட்டார்கள்.

நாம் நடாத்தும் இந்தப் பெயர் மாற்றக் கிளர்ச்சி துவேஷத்தின் அடிப்படையில் செய்யப்படுகிறதென்றால், சென்னையில் பலகாலமாக பாங்கு வெட்டிங்ஹால் என்ற பெயரால் அழைக்கப்பட்டுவந்த சர்க்கார் விருந்து மாளிகையை "இராஜாஜி ஹால்" என்று மாற்றியது எந்தத் துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டதென்பதை ஆச்சாரியார் சுயநலம் காரணமாக விளக்கமுடியாவிட்டாலும் அல்லது முன்வராவிட்டாலும், அவரது அரசியல் பக்தகோடிகளாவது விளக்கம் தரவேண்டாமா? சைனாபஜார் ஏன் எந்தத் துவேஷத்தால் நேதாஜி பஜாராயிற்று?

பீச்—கடற்கரை

போர்ட்—கோட்டை

பார்க்—பூங்கா

கஞ்சிவரம்—காஞ்சீபுரம்

மாயவரம்—மாயூரம்

நாகபடாம்—நாகப்பட்டினம்

மஜூரா—மதுரை

தின்னவேலி—திருநெல்வேலி

இவையும் இவை போன்ற இன்னும் பல ஊர்கள், தெருக்கள், சந்தைகளின் பெயர்கள் எல்லாம், மாற்றப்பட்டுள்ளனவே, இவையெல்லாம் எந்தத் துவேஷம் — யார் மீதுள்ள துவேஷத்தால் ஏற்பட்ட மாறுதல் என்று கூறமுடியுமா?

அன்பர் அவனாசிலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில், அவருக்கு ஏற்பட்ட தமிழாசை, சில ஊர்ப் பெயர்களைத் தமிழாக்கம் செய்யத் தூண்டிற்று— அதன்படி தம்முடைய அதிகார பலத்தைத் தமக்குப் பக்கத்துணையாக வைத்து அந்தக் காரியத்தில் ஓரளவு வெற்றி கண்டார். அன்பர் அவனாசியார் யார் மீதோ உள்ள துவேஷத்தாலேயே இந்தக் காரியத்தைச் செய்தார் என்று எந்தக் கருத்துக் குருடனாவது கூறுவானா?

நாம் நடத்தும் இந்தப் பெயர் மாற்றக் கிளர்ச்சிக்குக் காரணமும் நோக்கமும் கண்டுபிடித்த ஆச்சாரியார்,

> "பெயரை மாற்றுவது ஒரு முக்கிய விஷயமல்ல. அப்பெயரை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதுதான் முக்கியம்"

என்று மேலும் பேசியிருக்கிறார். பெயர் மாற்றம் ஒரு முக்கியமான விஷயமல்லவாம்! பெயர் மாற்றத்தில் பெருவிருப்பம் கொண்ட மறையவர் இவ்விதம், மனமறிந்த பொய் கூறுகிறார்.

காஞ்சிபுரத்திலே ஒரு மார்க்கெட் இருக்கிறது. அது நீண்ட காலமாகவே "டான்ஸ்" மார்க்கெட் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. இப்போது காங்கிரஸ் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும், காஞ்சிபுரத்தில் மிகமிக அவசரமாக முதலில் செய்துமுடிக்கவேண்டிய சீர்திருத்தம் எது என்பதைக் காங்கிரஸ்மூளை கண்டுபிடித்து, உடனே அந்தச் செயற்கருஞ் செயலைச் செய்துமுடித்துவிட்டது. அதாவது டான்ஸ் மார்க்கெட் இப்பொழுது 'ராஜாஜி சந்தை' என்று அழைக்கப்படுகிறது. இது எவ்வளவு முக்கியம் பாருங்கள்! டான்ஸ் மார்க்கெட்டா? அந்தப் பெயரைக்

திராவிட முன்னேற்றக் கழக
சட்ட திட்ட திருத்தம்

திராவிட முன்னேற்றக் கழகச் சட்டதிட்ட விதிகளில் மாற்றமோ, திருத்தமோ, சேர்ப்போ செய்ய நினைக்கும் பொதுக்குழு உறுப்பினர்கள், அவற்றைத் தீர்மான வடிவில் எழுதி 28—2—54-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு வந்துசேருமாறு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

"அறிவகம்,"
சென்னை,
10—2—54

அண்ணாதுரை
பொதுச் செயலாளர்.

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ.
தீட்டிய

பொன்னொளி

விலை அணா 4

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால் பில்லைகள் அனுப்புக. 20 பிரதிகளுக்குமேல் பெறுவோருக்கு 25-சதவிகிதம் கழிவு உண்டு.

'பவழ பஸ்பம்' விரைவில்!

பரிமளம் பதிப்பகம்
காஞ்சிபுரம்

கூட நாங்கள் காதால் கேட்கமாட்டோம், அதை உடனடியாக மாற்றினாலன்றி நாங்கள் உயிர்வாழமாட்டோம் என்று யாரோ கூறியது போலவும், உடனே அந்தப் பெரிய ஆபத்தைத் தடுக்க இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ததுபோலவும், காங்கிரஸ் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் வராததுமாய் இருக்கும்போதே அவசர அவசரமாக இந்தப் பெயர் மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள்.

பெயர்மாற்றம் ஒரு முக்கியமான விஷயமல்லவென்று கருதும் ஆச்சாரியார், இந்தப் பெயர் மாற்றத்துக்கு ஏன் அனுமதியளித்தார்? அதிலும் 'ராஜாஜி சந்தை' என்ற பெயரால் அதை மாற்ற ஏன் உடன்பட்டார்? பெயர்மாற்றத்தில் முக்கியத்வம் எதுவும் இல்லை, அந்தப் பெயரைப் புரிந்துகொள்வதுதான் முக்கியம் என்று கூறும் ஆச்சாரியார் இந்தப் பெயர்மாற்றத்தால் மக்கள் புரிந்துகொண்டதென்ன? அல்லது அவரேதான் புரிந்துகொண்டதென்ன? காஞ்சிபுரத்திலுள்ள 'டான்ஸ் மார்க்கெட்' என்ற பெயரை மக்கள் புரிந்துகொள்ளவில்லை என்ற புகார் நகராண்மைக் கழகத்தாருக்குக் (Municipality) கிடைத்ததால் அந்தப் புகார் மகஜரை மாகாண சர்க்காருக்கு அனுப்பி, காஞ்சிபுரவாசிகளில் மெஜாரிட்டியாருக்கு டான்ஸ் மார்க்கெட் என்றால் என்னவென்றே புரியவில்லை, அதன் காரணமாகப் பல முக்கியமான முன்னேற்றங்கள் தடைபட்டுக்கிடக்கின்றன. எனவே டான்ஸ் மார்க்கெட்டை ராஜாஜி மார்க்கெட்டாக ஆக்கினாலன்றி விமோசனம் ஏற்படாதென்ற நெருக்கடியான நிர்ப்பந்தத்துக்காளாகி அவ்விதம் செய்யப்பட்டதா? ஒரு பெயரைப் புரிந்துகொள்வதற்காகவே அதில் மாற்றம் செய்யப்படுகிறதென்றால், ஆச்சாரியாரின் பெயரை ஒரு சந்தையோடு இணைத்து, "ராஜாஜி சந்தை" என்று ஏற்படுத்திய பின்னர்தான் காஞ்சிபுரவாசிகள் ஆச்சாரியாரை யார் என்று புரிந்துகொண்டார்களா? கருவாட்டிலிருந்து கருணைக்கிழங்குவரை விற்கப்படும் ஒரு சந்தைக்கு ஆச்சாரியாரின் பெயரைச் சூட்டியதால்தான், அவரை அவ்வூர் மக்கள் புரிந்துகொள்ள முடிந்தது என்ற அவ்வளவு மோசமான நிலையிலா ஆச்சாரியார் வைக்கப்பட்டிருக்கிறார்? ஆச்சாரியாரை ஒரு அரசியல் ஞானி என்று கூறிப் பெருமிதம்கொள்ளும் காங்கிரஸ் அன்பர்கள், அவரை இவ்வளவு கீழ்த்தரமான முறையில் மக்கள் புரிந்துகொள்ளும்படிசெய்ததைக் காண நாம் உண்மையிலேயே வருந்துகிறோம். ஆச்சாரியாருக்கு உண்மையான மதிப்புக்கொடுத்து அவரைப் பாராட்டும் எவரும் இந்தக் கொடுமையை ஒருபோதும் சகித்துக் கொள்ளவேமாட்டார்கள்.

எதிர்க் கட்சிகளை முன்னேற விடாமல் தடுத்து முறியடிப்பதில் அவர் தம்முடைய மூளையைச் செலவிட்டு வீணாக அவதிப்படுகிறார் என்பதைத் தவிர, பாவம், அவரை நாம் மட்டுமல்ல, எவருமே குறை கூறுவதில்லை.

கேவலம், சந்தைக்கும் பிற இடங்களுக்கும் அவரை இழுத்துக் கொண்டுபோய், நாட்டுக்கு அறிமுகப்படுத்துமளவுக்கு அவர் ஒன்றும் அவ்வளவு மோசமானநிலையில் இருப்பவரல்ல. காங்கிரசின் முக்கியமான தலைவர்களின் முதல் வரிசையில் இன்றைக்கும் அவருக்கு ஒரு இடம் உண்டு. பலதடவைகளில் அவர் காங்கிரசுக்கு விரோதமாக நடந்துகொண்டிருந்தபோதிலும், காங்கிரஸ் அவரைமட்டும் விரோதிப்பதில்லை. காரணம் பலப்பல. காந்தியாரின் சம்பந்தி என்பதற்காக மட்டுமல்ல— இன்னும் பல காரணங்கள் ஏராளமாக உண்டு. விரிப்பிற் பெருகுமென்றஞ்சி விடுத்தனம்.

* * *

ஒன்றுக்கும் உதவாதென்று நாடே தீர்ப்பளித்துவிட்ட புது ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு மெருகு பூசி மினுக்கிக்காட்டி, எப்படியாவது அதை விலைக்கு விற்று விடலாமென்ற ஆசையால் உந்தப்பட்ட ஆச்சாரியார், பருளேகர் கமிட்டி என்ற தரகர்களை வைத்து விளம்பரம் செய்ததில் சரக்கின் பாதி விலையைக்கூட உருப்படியாகக் காண முடியாதென்பதை அறிந்ததும், கிடைத்தவரையில் இலாபம் என்ற நிலைக்கு வந்து, சரக்குக் கிராமப் புறங்களில் சரியாக விலையாகாததால் நகர்ப்புறங்களுக்காவது கொண்டுபோய் விற்றுப்பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அந்த முயற்சியையும் செய்து பார்த்து விடுவது என்ற முடிவோடு வியாபாரத்தை ஆரம்பித்தார். அந்தச் சமயமாகப் பார்த்து இன்னொரு வியாபாரி, அதற்குப் போட்டியாக வேறொரு சரக்கைக் கொண்டு வந்துவிட்டார்.

மார்க்கெட்டுக்குக் கொண்டுவரப்பட இருக்கும் இந்த இரண்டு சரக்குகளும், பார்ப்பதற்கு ஏறக்குறைய ஒரே விதமாகத்தான்

(13-ம் பக்கம் பார்க்க)

‘அன்னக்கிளி’ அம்மைபற்றி!

சங்கரநயினார்கோவிலுக்கு அருகிலுள்ள நெல் கட்டும் சேவல் எனும் ஊரிலிருந்து ஓர் செய்தியை மதுரையில் வெளிவரும் தின ஏடுகள், மிக ஆர்ப்பாட்டத்தோடு பிரசுரித்திருக்கின்றன.

அந்த ஊர் தச்சுத் தொழிலாளியாம் தோழர் அண்ணாமலை என்பாரின் மனைவி அன்னக்கிளி அம்மையார் கடந்த பத்து மாதங்களாக படாத பாடுபடுகிறார்களாம்! அவர்கள் பட்ட கஷ்டத்தை மதுரை 'தினமணி' விவரிக்கிறது-பின் வருமாறு:

*

“10 மாதங்களுக்கு முன்னர் அன்னக்கிளி என்பாள் நோயுற்றதாயும் முதலில் அப்பெண்மீது கற்கள் விழுந்தனவென்றும் பிறகு அவள் அணிந்திருந்த நகையும் தாலியும் காணாமற்போய் விட்டதென்றும், ஒரு தினம் அவள் பக்கத்தில் இருந்த மாவரைக்கும் கல் திருகை தூக்கி எறியப்பட்டதாயும் அதனால் காயம்பட்டதாயும், சாப்பிட வைத்திருந்த ஆகாரம் காணாமல் மறைந்துவிட்டதென்றும், சில சமயம் சாப்பாட்டு பாத்திரம் அந்தர்தியானமாகி விடுகிறதெனவும், உடுத்தியிருக்கும் ஆடை உரியப்படுவதாயும், சேலையில் தீப் பிடிக்கும் எனவும், உறுவப்பட்ட சேலை கூரையில் சொருகப்பட்டோ அல்லது அடுப்புக்குள்ளோ இருக்கும் எனவும் தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதென்றும் தினம் மேற்படி பெண்மீது அடி விழுகிறது. அடி விழும் சப்தம் பிறருக்குக் கேட்கிறது. அடி விழும் முன்னர் விளக்கு அணைந்து விடுகிறதாம். சில சமயம் மயக்கம் போட்டுவிடுவதாயும், மயக்கம் தெளிந்த பின்னர் என்னவென கேட்டால் ஆண் பெண் இரு உருவங்கள் தன்னை அழைப்பதாயும், அடிப்பதாயும் இம்சை செய்வதாயும் கூறுகிறாள் என்றும் மேற்படி அன்னக்கிளிக்கு அந்த உருவங்கள் கண்ணுக்கு தெரிவதாயும் பக்கத்திலிருக்கும் உதவி செய்யும் பெண்ணுக்கு அந்த உருவங்கள் தெரியவில்லை. ஆனால், பேசுகிற, அடிக்கின்ற சப்தம் கேட்கின்றதாம். அடி விழும்போது நோயாளியைப் பிடித்தால் அடிக்கும் கை வடிவங்கள் புலப்படுகிறதாம் சில சமயம் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டுபோய் வைத்துவிடுகிறதாம். சில சமயம் கயிறுபோட்டு கட்டிவைத்துவிடுகிறதாம். அதை அவிழ்ப்பது கடினமாக இருக்கிறதாம். தன் கண்களை குத்துவதாக சப்தமிட்டு அன்னக்கிளி கண்ணை இரு கைகளால் மூடி திரும்பவும் திறக்கும் சமயம் கண்களிலிருந்து இரத்தம் வடிகிறதாம். ஷை யாளை அடிக்கும்போது, அவ்வீட்டிலிருக்கும் கப்பு, குடை இவைகள் கையாளப்படுவதாயும் இரு தினங்களாக ஷை பெண்ணை வீட்டு உத்திரத்தோடு கட்டி தொங்க வைத்து கட்டி தூக்கிவிட்டதாயும் கழுத்திலும் கயிறு போட்டு தூக்கிவிடுவதாயும் அந்தரமாக தொங்கும் பெண்ணை பக்கத்திலுள்ளவர்களின் பெருமுயற்சியால் மீட்கப்படுவதாயும் இந்தக் கொடுஞ் செயலால் ஷை குடும்பம் படும் அவஸ்தை சொல்ல முடியாதாம். அக்கம் பக்கமிருப்போர் பரிதாபப்படுவதைத் தவிர வேறு உதவி செய்ய வழியின்றி பெரும்பீதியும் ஏற்பட்டிருக்கிறது”

[அவள் — என்று ‘அம்மாமிப் பாஷையிலே குறிப்பிட்டிருப்பது, நாம் அல்ல. அந்த ஏட்டின், வரிகளை அப்படியே பிரசுரித்துள்ளோம்.]

*

இவ்வளவு வேதனைகளையும் அந்த அம்மையார் அனுபவித்து வருவதாக, ஒருவர் தீட்டிய கடிதத்தை வைத்து. ஏடு, செய்தியைப்பிரமாதமாகப் பிரசுரித்திருக்கிறது.

அன்னக்கிளியார், இத்தகைய அவஸ்தைகளை அனுபவிப்பதற்குக் காரணம், பில்லி, சூன்யம், குறளி வித்தை, ஏவல், என்பதாகவும் காரணம் காட்டியிருக்கின்றனர்.

ஏடுகள் இதுபோன்ற செய்திகளை மிகைப்படுத்திக் கூறும்போது, பலருக்கு ஆச்சரியமும் அச்சமும் ஏற்படுவது சகஜமே. அதன் காரணமாக பலதோழர்கள், இந்த விஷயங்களைப்பற்றி விளக்கம் வேண்டி, கடிதங்கள் தீட்டி இருக்கிறார்கள்.

அறிவியக்கம் அரும்பிய நாள் முதல், கண்முன் காணப்படாத எந்த ‘அதிசயங்களையும்’ நம்புவதில்லை. ஆயினும் ஆங்காங்கே, தீ மிதித்தல்! சாமியாடுதல்! பிசாசு பிடித்து ஆட்டல்! முதலிய காரியங்களை நடத்துவதில், நமது மக்களுக்குள்ள சிரத்தை இன்னும் குறைந்தபாடில்லை. இதற்குக் காரணம், மக்கள் பக்தியிலிருக்கும், மூடநம்பிக்கையும் அறியாமையும்தான்.

இதனை விளக்கிய பேராசிரியர்கள், இங்குமட்டுமல்ல; வெளிநாடுகளில் ஏராளம் இருக்கின்றனர். அவர்களில் தலை சிறந்த அறிஞர், இங்கர்சால் ஆகும் அவரைப்போல இந்த விஷயங்களில், நமதுமக்களின் அறியாமை இருளை விளக்கப் போராடியவர் மறைந்த மாவீரர் மா. சிங்காரவேலராகும். அவர், இந்த அறியாமைகள் குறித்து 1932ல் பல கட்டுரைகள், தீட்டி இருக்கிறார். அதனைத் தருகிறோம் தோழர்கள், விளக்கத்துக்கு.

* * *

மூடநம்பிக்கைகளுக்கு ஆதாரம் ஆன்ம கற்பனை எனக்கூறுவோம் இந்த கற்பனையால் அனேக மூடபழக்க வழக்கங்கள் தென்னாட்டில் வழங்குவதையும் காண்கிறோம். இன்னுஞ் சில பயங்கரமான மூட பழக்கங்களை விசாரித்தறிவோம். இக்கெடும் பழக்கங்களும் ஆன்ம கற்பனையால் நிகழ்வதைக் கண்டால் இந்த கொடிய கற்பனையின் அதிக்கத்தை என் சொல்வாம்! கடவுள்

கற்பனையைவிட இந்த ஆன்ம கற்பனையின் கொடுமைகள் மிகக் கொடுமை விளைவிக்கின்றன வென்றே சொல்ல வேண்டும். தேகமன்னியில் "ஆன்மாபோன்று தனிப் பொருள் ஒன்று தேகத்திற்குள்ளிருந்து மனிதனுடைய சகல நடத்தைகளையும் நடத்தி வருகின்றதென்னும் உத்தேசம் (Speculation) பலவித கொடிய பழக்கங்களுக்குக் காரணமய் இருந்து வருகிறது. மூட சனங்கள் அதிகமாக வழங்கிவரும் ஒரு கற்பனை பழக்கத்தை எடுத்துக் கொள்ளுவோம். சூனியம் வைத்தல் என்ற வித்தையை (Art) சற்று விசாரிப்போம். இந்த வித்தையை மரணவித்தை என்பார்கள். அதாவது ஒருவனை அழித்து விடுதற்குரிய வித்தை என்று சொல்லலாம். பழக்கத்தில் சூனயம் வைத்து ஒருவனை "எடுத்து விடுதல்" என்றும் சொல்லுவார்கள். அகால நோய் ஒருவனுக்கு வந்தால் அந்த நோயை சூனியத்தால் ஏவிவிடப் பட்டதென்பர். சிலநாளைக்குமுன்பு சூனியம் வைப்பதற்கு முயன்ற கூட்டத்தாரை கிராம அதிகாரிகள் கைப்பிடியாக பிடித்த காலையில் அந்த இடத்தில் நடந்தசம்பவத்தை சற்று விளக்குவோம். திருவான்மியூர் என்கிற கிராமத்தில் பலகைவாராவதிக்கு அருகில் இரண்டு பங்காளிகளுக்குள் மனவருத்தம் நேரிட்டு, ஒரு பங்காளி இன்னொரு பங்காளியை சூன்யம் வைத்து எடுத்துவிட சில சூன்யக்காரர்களை வரவழைத்து அடுத்த தோட்டத்தில் சில சூனியத்திற்கு வேண்டிய கிரிகைகள் நடந்தனவாம். அவையாவன சுடுகாட்டிலிருந்து கொண்டு வந்த சில எலும்புகள், முக்கியமாக பெருவிரல்கள், ஓணான் தலைகள், ஆட்டு இறைச்சி, கோழி இரத்தம், தேரை (ஓர் வித தவளைவகை) மஞ்சள், குங்குமம், தேங்காய், பழம், அழுக்கடைந்த கந்தைத்துணி, இன்னுஞ் சில வஸ்துக்கள் அங்கு கிடந்தனவாம். இவைகளைக் கொண்டு மந்திர ஜபம் செய்ய எத்தனித்த காலை எதிரி இதனை அழித்துவிட்டதாக வதந்தி. இந்த அழுக்கான வஸ்துக்களைக்கொண்டு(Filthy things) சில மந்திரங்களை உச்சாடனம் செய்து (அதாவது), விளங்காத அர்த்தமில்லாத சொற்களைச் சொல்லி, எந்த ஆன்மையையோ எழுப்புவதாக எண்ணி நாயை உசுக்கவிடும் மாதிரியாக எழுப்பிய ஆன்மாவையோ, பிசாசையோ, குட்டிச் சாத்தானையோ, எதிரியின் பேரில் விடுவதாக உத்தேசித்துக்கொண்டு பூசையை நிறைவேற்றுகின்றார்கள். இந்த வித்தையில் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதுயாதெனில் ஆதிமுதல் அந்தம்வரை எல்லாம் கற்பனைகளே. மந்திரங்களும், கற்பனை. (Dirty things) அசங்கித வஸ்துக்களைக்கொண்டு பூதமோ, பிசாசோ, கன்னிகையோ, குட்டிச்சாத்தானையோ, எழுப்புவதும் கற்பனை. அவைகள் மூலமாக எதிரியை கொல்ல நினைப்பதும் கற்பனை. கற்பனை "ஆன்மாக்களால்" நோய் உண்டாக்குவதும் கற்பனை. இந்த கற்பனைகளை ஒவ்வொன்றொன்று கோர்க்கப்பட்டு அவைகளிலிருந்து விளையும் வினைகளைக் கண்டால் மூட கற்பனைகளின் ஆதிக்கமே ஆதிக்கம்! உலகம் கற்பனைகளாலேயே மயங்கி வருந்துகின்றது.

சூனியம் வைத்தல் என்பது புராதனமான வித்தை என்னலாம். யஜுர் (Yajur veda) வேதத்தில் இந்த கற்பனையைக் காணலாம். அசங்கிய வஸ்துக்களால் பிசாசுகளை வசப்படுத்தலாமென்ற கோரிக்கை ஒரு காலத்தில் உலக முழுமையுமே பரவி இருந்தது, ஷேக்ஸ்பியர் (Shakespear) என்ற பிரபல ஆங்கில நாடகக்கவி மாக்பத் என்ற நாடகக்கதையில் சூனியக்காரிகள் மந்திரங்களால் அசங்கிதமான வஸ்துக்களால் பேய் பிசாசுகளை எழுப்புவதை நன்றாக வர்ணித்துள்ளார். இதைப்போன்ற கற்பனையை ஜர்மன பிரபல கவியாகிய கேதே என்றவர் தன்னுடைய பிரபல நூலாகிய 'பாஸ்டில்' வரைந்துள்ளார். நமது நாட்டில் "சூன்யம்" என்ற பித்தலாட்டம் கிராம மக்களை வதைத்து வருகின்றது. சூனியத்தால் கிராம முழுமையுமே பயந்து விடுகின்றது! சூனியக்காரனென்ற பித்தலாட்டக்காரனைக் கண்டதும், பாமர மக்கள் நடுங்குகின்றார்கள். அறிவின்மையாலும விசாரணை இன்மையாலும், வெறுங் கற்பிதச் சொற்கள் இவ்வளவு பயத்தை உண்டாக்குகின்றன. இதன் காரணமென்னவெனில் அறியாமையே தேகத்தில் நிகழும் செய்கைகள் யாவும் (Bodily actions) நடத்தைகள் யாவும் (Behaviour) நிகழ்கின்ற காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் "புருஷன்" என்ற தனிப்பொருள் ஆன்மாவடிவமாக, அல்லது பேய் பிசாசுவடிவமாக அல்லது குட்டிச்சாத்தான் வடிவமாக உலாவுகின்றதாக எண்ணுகின்றார்கள். இது முதல் கற்பனை. அக்கற்பிதப புருஷர்களை சிற்சில கிரியைகளால் அவைகளுக்குப்பிரியமான வஸ்துக்களைக்கொண்டு வசியப்படுத்தலாமென்ற எண்ணம் இரண்டு. இத்தியாதி பேய் பிசாசுகளைக் கொண்டு, அதாவது அவைகளை வசியப்படுத்திக் கொண்டு, தங்கள் எதிரிகளின் பேரில் எந்த குட்டிச்சாத்தான்களை வெளியிடலாமென்ற எண்ணம் மூன்று. இம்மூன்று எண்ணங்களால சாமான்ய மனிதர் நோய்கள் உண்டாகும் காரணகாரியங்களைத் தெரிந்து கொள்ளாமல் மந்திர தந்திரங்களால் அவைகள் உண்டாகலாமென்றும், அந்நோய்கள் மூலமாக பகைவரை வருத்தலாமென்றும் நம்புகின்றார்கள். இந்த மூடநம்பிக்கைக்கு ஆதாரமென்னவெனில் ஆன்மா ஒன்று உண்டென்ற மூடநம்பிக்கையேயாகும். இந்த மூடநம்பிக்கையைப்போன்ற இன்னொரு மூடநம்பிக்கை நமது மக்களிடம் காணலாம். அதாவது "கழிப்பு எடுத்தல்" என்னும் ஓர் பழக்கமுறை. இது பலவிதமாக பலவஸ்துக்களைக் கொண்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது! கழிப்பின் முக்கிய கருத்து என்னவெனில் சில வஸ்துக்களைக் கொண்டு சில்லரை தெய்வங்களாகிய முனீஸ்வரன், காளிஅம்மன் அருளைடபெறலாமென்பது. இதற்கு செய்யவேண்டிய முக்கிய காரியமென்னவெனில், பலியிடுதல், அதாவது உயிரை, எந்த உயிராயினும், அந்த தேவதைகளுக்கு சமர்ப்பித்து அத்தேவதைகளால் உண்டானதாக எண்ணப்படும் சில நோய்கள் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையே. இந்த நம்பிக்

கையைச் சாமான்யரிடம் அதிகமாகக் காணலாம்.

சில்லரை நோய்களாகிய வயிற்றுப் போக்கு, சீதபேதி, குளிர் ஜுரம், இவைகளைப் போக்க தேங்காய்களை சமர்ப்பிக்கின்றார்கள். சில இடங்களில், தேங்காய் குடுமியில் மூன்று குச்சுகளை நுழைத்து, அந்தக் குச்சிகளுக்கு கந்தைகளைச் சுற்றி பத்தவைத்து, நோயாளிமுன் சுத்துகின்றார்கள். இத்துடன் மிளகாயை நெருப்பிலிட்டு, அதையும் நோயாளி முகத்திற்கெதிரில் சுற்றும் பழக்கம், மீன் பிடிக்கும் வலைஞரிடம் காணலாம். மலேரியா என்ற குளிர் ஜுரங்களுக்கு, காலணாவை மஞ்சள் கந்தையில் சுற்றி கையில் கட்டுகிறார்கள். இதை ஆமுலெட்ஸ் (Amulets) என்று அதாவது குளிசம் என்று சொல்லுவார்கள். இத்தியாதி வஸ்துக்களுக்கும் வியாதி போக்குக்கும் என்ன சம்பந்தமென்பதை அறியக்கூடவில்லை. ஆனால், இவைபோன்ற பழக்கங்கள் உலக முழுமையுமே காணலாம். காட்டுமிராண்டிகளிடம் குளிசத்தை வெகு விநோத காட்சிகளுக்கெல்லாம் உபயோகிக்கின்றனர்! விரோதியை வெல்ல வேண்டுமானால் அதற்கு ஓர் குளிசம்; நோய், 'காற்று' 'கருப்பன்' படாதிருக்க வேண்டுமானால் அதற்கோர் குளிசம்; ஒரு பெண்ணை வசியம் செய்ய வேண்டுமானால் அதற்கோர் குளிசம் இன்றைக்கும் சில கட்சிக்காரர்கள், ஜட்ஜிகளை வசியம் செய்ய மந்திரித்த குங்குமத்தையாகிலும், குளிசத்தையாகிலும் தரித்துக்கொண்டு ஜட்ஜ்முன் நிற்கப் பார்க்கலாம். இப் பழக்கங்களின் அந்தரங்க தாத்பரியம் என்னவெனில், மந்திரத்தால் சிறு தேவதைகளை வசியம்செய்து, அந்தத் தேவதையை அந்தக் குளிசத்தில் புகர்செய்து, அந்தத் தேவதையின் சக்தியைக்கொண்டு, வேண்டிய கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்வதென்ற நினைவுபோலும்!

நான்கு சந்து சந்திக்கும் இடங்களில் சில உயிரைக்கொன்று, மஞ்சள், ஓணன்வால், அல்லது முயல் காதுடன், புதைக்கும் பழக்கம் அதிகமாக பட்டணங்களிலும் பார்க்கலாம். சந்திக்கும், சந்துகளுக்கும், கோரிய கோரிக்கைக்கும் என்ன சம்பந்தமென்றும் தெரியவில்லை. நாலா பக்கங்களிலிருந்து வரும் ஜனங்களில், தங்கள் விரோதியும் வருவான் என்ற எண்ணமாய் இருக்கலாம்! புதைத்த வஸ்துக்களுக்கும், நான்கு சந்து சந்திப்புக்கும், வயற்றுக் கழிச்சலுக்கும், என்ன சம்பந்தமென்றும் விளங்கவில்லை? சில சூன்யக்காரர்களை விசாரித்ததில், புதைத்த சாமான்கள் அழுகும்மாதிரி, எதிரியும் அழுகிப் போவானும்! இது என்ன விந்தை? சுடுகாட்டில் வேகும் தேகங்களைப் போல் அவைகளின் சுற்றத்தாரும் வெந்துபோவதை உற்றிருக்கிறது!!! அல்லது, புதைத்த பிணங்கள்மாதிரி சுற்றத்தாரும் அழுகுவார்களோ? மனிதனுக்கு, அகோர எண்ணங்கள் (Wild, bizzare thoughts) தோன்றுகின்றன. அவைகளில், இவையும் ஒன்றாக இருக்கலாம். இதை சாமான்ய மக்கள், கேட்டு, மயங்கி, விஷயங்களின் சம்பந்தங்களை அறியாமல், பல எண்ணங்களிலும் மனதைச் செலுத்தி, மோசம் போகும் விநோதமே, விநோதம்! இவைகளைச் செய்து பிழைக்கும் மனிதர்களை விலங்கிட்டு தண்டிக்கும்வரை, இந்த அகோர எண்ணங்கள், பழக்கத்தில் வந்துகொண்டே இருக்கும். இதனால், பல ஆயிர ஏழை மக்கள் ஏமாந்துகொண்டே போவார்கள். பல உயிர்களுக்கும் நாசமுற இடங்கொடுக்கின்றது.

*

காட்டுமிராண்டிகள் கல்லும், காடும், நீரும், நிலமும், செடியும், மரமும், புல்லும் பூண்டும் பிசாசுகளுக்கு இருப்பிடமென்று பயந்து வாழ்கின்றனர். நமது தமிழ் நாட்டு மக்களுக்கு ஒண்டி மரமும், பாழ் வீடும், குட்டிச் சுவரும் பிசாசுகளுக்கு இருப்பிடமாம்! இவ்விதமாக இரண்டு குடும்பங்கள் ஒரு பாழ்வீட்டைப்பிடித்திருந்து, பிசாசால் அவ்வீட்டிலிருந்து துரத்தப் பட்டதாகவும் அதனை தமிழ் நாட்டில் பலர் நம்புவதாகவும் அதனை விசாரித்த திரு. வி. டி. ஸ்குடட் என்பவர் அந்த சம்பவம் உண்மைதான் என்று சொல்வதாகவும், அவர் பிரக்யாதி பெற்றவராகையால் அவர் சொல்லை எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும், தாங்கள் நம்பாமற்போன போதிலும் பிறர் அவர் சொல்லை நம்புகிறபடியால் இந்த மகிமையை விளக்கிக்காட்ட வேண்டுமென்று நீண்டதோர் கடிதம் தஞ்சை சுயமரியாதைத் தொண்டர்கள் கையொப்பமிட்டு எழுதியுள்ளனர்.

இந்த திரு. ஸ்குடட் என்பவர் பிரபல்யம் பெற்றுமிருக்கலாம். பேய் பிடித்த வீட்டு சம்பவத்தை விசாரித்துமிருக்கலாம், அவர் அந்த வீட்டில் கொல்லப்பட்ட ஒருவரின் 'ஆன்மா' பேயாகி அந்த வீட்டண்டை உலாவிக்கொண்டிருக்கின்றதாகவும், அவர் நம்பலாம். ஆனால் ஒரு கேள்வி அவரை கேட்கின்றேன். அதாவது, அந்த கொல்லப்பட்ட மாது "ஆன்ம" ரூபமாக இருந்து கொண்டு, அந்த அகால சப்தங்களைச் செய்ததாக யார் பார்த்தார்கள் என்று கடாவுகின்றேன். பேய் பிடித்த வீட்டுக் கதைகளிலும், முனீஸ்வரன் பிடித்த மரங்களின் கதைகளிலும், "சப்தம் கேட்டது" "மலம் வந்து விழுந்தது" "சாணிச்சட்டி உடைந்தது" "மூத்திரம் ஊற்றப்பட்டது" "ஜன்னல் படபடவென்று அடித்தது" "கதவு திடீரெனத் திறந்து கொண்டது", "படியில் தடதடவென்று பெட்டி உருண்டது", இன்னும் பல அகால சம்பவங்கள் நடந்தனவென அனுமானிக்கின்றார்களே யொழிய, யாரும், இந்த கிருத்தியங்களை, அதாவது காரியங்களை, பேய் தான் செய்தது என்று யாரும் பார்த்ததாகச் சொல்வதில்லை. நமது நண்பரைக் கேட்கின்றேன், இந்த, திரு ஸ்குடட் யார்? எந்த விஷயத்தில் பிரக்யாதி பெற்றவர்? இவர் எந்த வேளையில், எந்த மணி நேரத்தில் விசாரிக்கப் புகுந்தார்? இவர் கூட யார் இருந்தது? இவர் பார்த்து பிசாசு என்று அனுமானித்ததை எப்பொழுது எழுதினார்? அவர் அந்த க்ஷணத்தில் எழுதினாரா? அந்தப் புத்தகம் எங்கே? எவ்வளவு நேரம் அவர் விசாரித்தார்? வீட்டு மூலைகளை எல்லாம் யார் விசாரித்தார்கள்? ஏன் எவனோ ஒருவன், அந்த வீட்டுச் சொந்தக்காரனுக்கு நஷ்டம் உண்டாக்க, அந்தச் சப்தங்களை மறைவாக நின்று செய்திருக்கலாகாது? இத்தியாதி சாட்சியங்கள் வரும்

(9-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!

திராவிடநாடு

காஞ்சி] 21—2—54 [ஞாயிறு

அவமானப்படுகிறார்!

★

'குடியிருந்த வீட்டைக் கொடுத்தார்! — இது கண்ட நேரு மலைத்தார்! உடனே 'கவர்னர் பதவி, இந்தா' என்றளித்தார்!'

'ஆமாம், தியாகிக்கு மதிப்பளிக்க வேண்டியதுதானே? செய்தார், நேரு. தவறென்ன?'

'தியாகிமட்டுமா. அவரைக் கொஞ்சம் பாருங்கள். பாண்டிய மன்னனைப்போலிருக்கும் கம்பீரம் யாருக்குவரும்? இத்தகைய அருமையான உருவம், அந்த அருமையான பதவியில் அமர்த்தப்பட்டது நியாயம்தான்'

'ஓட்டை உடைசல் எல்லாம் உட்கார்ந்திருக்கும்போது, ராஜபாளையத்துக்கு என்ன குறைச்சலாம்?'

'பண்டித நேரு இருக்கிறாரே, பலே கெட்டிக்காரர். இந்த திராவிடத்தாரின் குரலை, ஒரே நிமிடத்தில் மூடிவிட்டார். பிராம்மணரல்லாத குமாரசாமி ராஜாவைக் கவர்னராக்கிக் காட்டிவிட்டார்'

*

ராஜபாளையம் நண்பர் குமாரசாமி அவர்கள் ஒரிசா மாநிலத்தின் கவர்னராக நியமிக்கப்பட்ட செய்தி குறித்து, இவ்வண்ணமெல்லாம் பேசிக் குதூகலமடைந்தோருண்டு. அவர்கள் குதூகலத்துக்கும் பூரிப்புக்கும் குறுக்கே நிற்க விரும்பவில்லை, நாம். இந்திய ஆட்சிமுறையெனும் இந்த இரும்புக்கூண்டை உடைத்தெறியும் பணியிலீடுபட்ட நாம், இதனைப் பெரிதாக நினைக்கவில்லை. எனினும், அவர்கள் கூறியதுபோல, தென்னாட்டு மகன், ஒரிசாவின் கவர்னராகப் பதவியேற்கிறார் எனும் செய்தியைக் கேள்விப்பட்டபோது, நமக்குக் கொஞ்சம் ஆச்சரியம் ஏற்படத்தான் செய்தது. ஏனெனில், அந்தப் பதவிக்கு லாயக்குள்ள பலரிருந்தும், அவர்களையெல்லாம் நினைத்ததில்லை, டில்லி. ஆச்சாரியார்—சந்தானம்—முதலியோரே லாயக்கு பெற்றவர்களாகக் கருதப்பட்டனர். இந்நிலையில், ஓமந்தூராருக்கு அடுத்தபடியிருந்து, ஓரளவு கண்ணியத்தோடு திரும்பிய குமாரசாமியார், கவர்னராக அழைக்கப்பட்டிருக்கிறார் எனும் செய்தி, வியப்பைத்தான் தந்தது. இந்த வியப்பினை நமக்கெல்லாம் உண்டாக்கத்தான் இந்த நியமனம் என்று கூறினர், தேசிய நண்பர்கள். காரணம் எதுவோ—அவர் கவர்னராகப் பதவி ஏற்றுவிட்டார், ஒரிசாவில்—நடந்த 17ந்தேதி சட்டசபையையும் ஆரம்பித்து வைத்துவிட்டார்.

*

"தேர்தலில் தோற்றோம் — கண்யத்துடன் விலகிக்கொண்டோம்—இருந்தும், இப்போது, கவர்னர் பதவிக்கு அழைக்கிறார்கள். போகலாமா, வேண்டாமா?", என்று அழைப்பை ஏற்குமுன், சிந்தியாமலிருந்திருக்க முடியாது, தோழர் குமாரசாமி. ஏனெனில், அவர், ஒரு ஏனோ தானோவல்ல! இந்நாட்டின் முதலமைச்சராகவும், அமைச்சராகவுமிருந்து, அரசியல் நடைமுறைகளை ஆராய்ந்து காணும் வாய்ப்பைப் பெற்றிருந்தவர். அதனால், எண்ணியிருப்பார். எனினும், டில்லி அழைக்கிறது, 'ஒரு பெரிய பதவியிலிருந்தோம்!' என்ற பெருமையை ஏன் இழக்க வேண்டும்?—என்கிற சபலத்தால், வாய்த்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், பிடித்துக் கொண்டார். தோல்வி கண்டோர், தம்முடைய ஜாதி இன்னும் மங்கவில்லை என்பதைக் காட்டிக்கொள்ள முனைவது, மனித சுபாவம்தான். இதற்கு, அன்பர் குமாரசாமி, விதிவிலக்கல்ல! அதனாலேயே, பதவி வந்ததும் ஒப்புக்கொண்டு—ஏற்றிருக்கிறார். ஆனால், இங்ஙனம் தோற்ற ஒரு தோழரை, துரைத்தனத்தின் தலைவராக நியமிக்க, அகில உலகிற்கும் நீதி போதிக்கும் நேரு சர்க்கார், முன்வரலாமா? தோற்ற குமாரசாமியார், டில்லியை நோக்கி, 'எனக்கு வேலை தாருங்கள்', என்று விண்ணப்பமெதுவும் அனுப்பியதாகத் தெரியவில்லை! ஆனால், டில்லிதான், அவரைக் கூப்பிட்டு, அந்தப் பதவியை வழங்கியிருக்கிறது. அதனாலேயே பண்டிதரின் பெருந்தன்மை குறித்து, பலபடப் பேசினர் — தேசியத் தோழர்கள். குமாரசாமிக்கு விருந்தும வைத்தனர் — விழாவும் நடத்தினர் — மரியாதைகளோடு, ரயிலேற்றியும் அனுப்பி வைத்தனர். இந்த வைபவங்களை இங்கிருந்தோர் செய்ததையும் தவறென்று கூறவில்லை, நாம்! ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லுபவரை, இவ்விதமெல்லாம் வழியனுப்பத்தான் வேண்டும்—இல்லையெனில், இங்கிருந்து 'கவர்னராக' வரும் ஒருவரைப்பற்றி, அந்தப் பகுதியினர், அலட்சியமாக நினைக்கத்தான் செய்வர். அந்தக் கருத்தில், கவர்னராக நியமனம் செய்யப்பட்டவருக்கு, என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை—ஆதிக்கக்காரர்களின், ஏடுகள், அல்ல! — தோழர் குமாரசாமியின் கட்சி நண்பர்கள், செய்திருக்கிறார்கள்.

*

மாலை! பாராட்டு! புகழுரை!—இத்தனை வைபவங்களுடனும் சென்ற குமாரசாமியாரை, ஒரிசாவில், மக்கள் வரவேற்ற விதத்தைக் கேட்கும்போதுதான், விரசமாயிருக்கிறது. இவருடைய நியமனத்தைப்பற்றி அறிந்ததும், ஒரிசா மக்கள், 'வேண்டாம், இந்த குமாரசாமி!' என்று இந்தியக் குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும், தந்திகள் அடித்தனராம். ஆங்காங்கும், பொதுக்கூட்டங்கள் போட்டுக் கண்டித்தனராம்

இந்த 'ரகளை' அங்கே நடைபெற்றுக்கொண்டிருந்த போதுதான், நமது தேசிய நண்பர்கள், இங்கே விருந்துபசாரம் செய்தனர்! வழியனுப்பினர். சென்ற குமாரசாமியார், கவர்னர் பதவி யேற்றுக்கொண்டார் — கடந்த 17-ந்தேதியன்று சட்டசபையையும் கூட்டினார்—அதனைக் கவர்னர் என்ற ஹோதாவில், ஆரம்பித்துவைக்கச் சென்றார்! காரியதரிசியும் மெய்க்காப்பாளரும் கூடவர. கம்பீரமாகத்தான், சட்டசபைக்குச் சென்றிருக்கிறார். போலீஸ் பாதுகாப்பு, எதுவும் குறைவில்லை, அவருக்கு. ஆனால் சட்டசபையில் எழுந்து பேசும்போது, எதிர்க்கட்சி நாற்காலிகளில் எவருமே இல்லையாம்! எல்லாம் காலியாகக் கிடந்ததாம்!! இதைக் காணும்போது கவர்னர் குமாரசாமியின் உள்ளம், எப்படியிருந்திருக்கும்? 'கவர்னர்' என்பதால், தனக்கேற்பட்ட கலக்கத்தையும் அவமானத்தையும் மறைத்துக்கொண்டிருக்கக்கூடும். ஆனால், 'சாதாரண' குமாரசாமியாக, தனியாக இருக்கும்போது, சிந்திக்காமலா இருந்திருப்பார்! தன்னை, வரவேற்க, காங்கிரஸ்காரர் மட்டுமே கூடியிருந்தனர்—அவர்களும் ஏதோ கட்டுப்பாட்டின் காரணமாக ஒன்றும் பேசாமலிருந்திருக்கலாமே தவிர, ஒவ்வொருவர் உள்ளத்திலும் என்னென்ன கூத்தாடிற்றோ? யாருக்குத் தெரியும்! குமாரசாமியார் மட்டுமல்ல, எவருக்கும், இத்தகைய எண்ணம் எழத்தானே, செய்யும். தான் ஒரு மாநிலத்தின் கவர்னராகப் பதவியேற்கிறோம்! தன்னை வரவேற்கவில்லை, மக்கள்—தன்னுரையைக்கேட்க வரவில்லை, மக்கள் மன்றப் பிரதிநிதிகள். இந்த அவமானத்தால், நண்பர் ராஜபாளையத்தார் மனம், நிச்சயம் வருந்தியிருக்கும்

ஏனெனில், தேர்தலில் தோல்வி பெற்றதுமே, தன்னை ஆட்சிப் பொறுப்பிலிருந்து விடுவிக்கும்படி சென்னைக் கவர்னரைக் கேட்டுக்கொண்டவர்! அவருக்கு நிச்சயம், இந்நிகழ்ச்சி உள்ளத்தைத் துளைத்திருக்கும். 'எங்கேயோ, கிடந்தோம்! ஏன், வந்து மாட்டிக்கொண்டோம்?' என்று எண்ணாமலிருந்திருக்கமுடியாது. அதிலும், அவருடைய பிரசங்கத்தைக்கேட்க சட்டசபைக்கு வராமலிருந்ததோடு நின்றுவிடவில்லை, ஒரிசா ஆட்சிமன்ற அன்பர்கள்—தமது கடமை எதுவோ, அதனைச் சரிவரச் செய்திருக்கின்றனர். "தன்னுடைய தொகுதியில் மக்களிடம் நம்பிக்கைப் பெறமுடியாத ஒருவரை, எங்கள் தலையில் உட்கார வைத்தால், எப்படி நாங்கள் ஏற்கமுடியும்?" என்று அறிக்கைமூலம், கேட்டிருக்கின்றனர்.

உண்மைதான்! சிறு தொகுதியில் மக்களிடம் நம்பிக்கை பெறமுடியாத ஒருவரை, மாநிலத்தின் தலைவராக, ஒரு தலைமை ஆட்சி, உட்கார வைப்பதை யாரும் சகிக்கமுடியாதுதான். அந்த வகையில் இதனை எடுத்துக் காட்டவந்த எதிர்க்கட்சியினரின் பொறுப்புணர்ச்சியை யாரும் குறை கூற முடியாது. ஆனால் அவர்கள், இந்தக் குற்றச் சாட்டோடு நின்றுவிடவில்லை — "இந்த குமாரசாமிராஜா சென்னை முதலமைச்சராக இருந்தபோது அவரது சர்க்காரைப்பற்றிக் கூறப்பட்ட லஞ்ச ஊழல் விவகாரங்கள் ஏராளம். அத்தகைய ஒருவரா, எங்களை ஆள வருவது?" என்றும் கேட்டிருக்கிறார்கள்.

உண்மைதான்! இங்குள்ளோருக்கு குமாரசாமியாரின், கம்பீரம் தெரியலாம்— ஆட்சிநடத்திய முறைகள் தெரியலாம்— ஆனால், அங்கேயிருப்போருக்கு? பிரகாசமும், குமாரசாமிராஜாவும் நடத்திய விவகாரங்கள் தானே, தெரியும்! இந்த விவகாரத்தில் இவருடைய பெயர் எவ்வளவு அடிபட்டது! அத்தகைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளான ஒருவரையா, இன்னொரு மாநிலத்தின் கவர்னராக ஆக்குவது!— குமாரசாமியாரின் பொதுத்தொண்டைக் கவுரவிக்க வேண்டுமெனும் ஆசை, பண்டிதருக்கேற்பட்டிருந்தால், அதற்கு இதுதானா வழி? எங்கோகிடந்த ஆச்சாரியாரை இழுத்துவந்து M.L.C. யாக்கியதுபோலவோ அல்லது பக்தவத்சலத்துக்கு இடம் தந்து M. L. C யாக்கி மந்திரியாக்கியது போலவோ, செய்திருக்கலாமே! அதை விட்டுவிட்டு, இவரை அங்கேன் அனுப்பவேண்டும்— இப்படி மூக்கறுக்கவேண்டும்.

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

வரை இத்தியாதி கதைகளை சற்று அவநம்பிக்கையிலேயே வைப்பதுதான் யோக்கியப் பொறுப்புக்கு லட்சணமென அறிக.

இந்தவிதக் கதைகள், மூட ஜனங்களிடம் அதிகமாக வழங்குவதைக் காணலாம். இந்தக் கதைகளை நம்புகிறவர்கள், முக்கியமாக மூன்று விஷயங்களை நிரூபிக்க வேண்டும்:—

முதலாவது, மனிதனுக்குள் திரேகமன்னியில், ஒரு "ஆன்மா" இருப்பதாக ருசுப்படுத்த வேண்டும். இரண்டாவது, அவன் இறந்த பிறகு, அந்த "ஆன்மா" தனித்து வாழ்வதாக நிரூபித்தல் வேண்டும். அந்த "ஆன்மா" நமது உள்ளக்கண்ணால் அதாவது திரேகக்கண்ணால் பார்த்ததாக நிரூபித்தலும் வேண்டும். இந்த மூன்று சாட்சியங்களை யாராகிலும் கொடுப்பதற்கு தயாராயிருக்கின்றார்களா? எனக் கேட்கின்றேன்?

"பேய்" "பிசாசு" என்றால் என்ன? ஐம்பூத சேர்க்கையால் உண்டானதா, அல்லது உளதா? அது என்னவர்ணம்? குட்டையா? நிகளமா? அதற்குக் கைகாலுண்டா? அதற்குக் கண்கள் உண்டா, எந்த அவயவங்களை உடைத்தாயிருக்கிறது?

அகாலமாக கொலை உண்டவர்களுடைய ஆன்மாதானா பாழ் வீட்டில் தங்கவேண்டும்? ஒரு நாளைக்கு ஆயிரம் ஆயிரம் அகால கொலைகள் நடக்கின்றனவே, அந்த ஆன்மாக்கள் எந்தக் கொலை வீட்டில் தங்குகின்றன? யாரும் சஞ்சாரம் செய்யாத வீட்டில்தானா, இந்த திரு. ஸ்கட் அனுமானித்த ஏகதேச ஆன்மாவுக்கு விளையாட்டு?

கூச்சல் போடத்தானா இந்தப் பேய்களுக்குத் தெரியும்? கூச்சல் போட வாய்வேண்டுமே, வாயுடைய பிசாசுக்கு, மற்ற அவயங்களும் இருக்குமன்றோ? ஏன் அந்த அவயவங்களுடன் நாம் செய்யும் வேலைகள் எல்லாம் செய்யக்கூடாது?

பிசாசுகளுக்கு ஆடையுண்டோ? சட திரேகத்தில்தான் சூட்சும திரேக ஆன்மா உண்டு. ஆனால் ஆடையில் சூட்சும ஆடையும் உண்டோ?

போர்க்களத்தில் அகாலமாகக் கொல்லப்படுவோருடைய கோடான கோடி மக்களது ஆன்மா, எங்கே உலாவுகின்றன? எந்த ஜன்னலையும், கதவுகளையும் அசைக்கின்றன? இந்த "பரிசுத்த ஆன்மாவுக்கு" மலத்தையும் ஜலத்தையுமா எறிய சக்தியுண்டு? ஏன் சந்தனத்தை வாரி வீசலாகாது?

இந்தப் பேய் பிடித்த கதைகளை' பிசாசுபிடித்த கதைகளை நான் கேட்கும்போதெல்லாம், எனக்கு நான் சிறுவனாய் இருக்கும்போது கேட்ட கதை ஒன்று ஞாபகத்தில் வருகின்றது. ஒரு கிழவியின் "ஆன்மாவுக்கு" யாதி இரவில், தாகம் எடுத்ததாம். கழிநீர் பானையில் அந்த "ஆன்மா" சென்று கழிநீரை குடிக்கும் காலை, பானையில் உண்டான சப்தத்தைக் கேட்ட இன்னொரு கிழவி, எலியோ, பெருச்சாளியோ, கழிநீரைக் குடிப்பதாக நினைத்து, அந்தப் பானையின் வாயை மூடிவிட்டாளாம்! அதனால், தண்ணீர் குடிக்கச் சென்ற "ஆன்மா" அந்தப் பானையில் அடைப்படவும், அந்தக் கிழவி இறந்துவிட்டாளாம்! சுடலைக்கு கொண்டுபோகையில், அது மத்தியான வேளையானதால், மாடுகள் தண்ணீர் அருந்த வீட்டுக்கு வரவும் கழிநீர்ப்பானை திறக்கப்படவும், அதில் அடைபட்ட "ஆன்மா" ஓடி வந்து, இறந்த கிழவிக்குள் புகுந்து கொள்ளவும், அந்தக் கிழவி தூங்கி விழித்தவள்போல் எழுந்தாளாம்!!! இந்தக் கதையை உண்மை எனவே, என்னுடன் விளையாடிய சிறுவர்கள், சொல்லுவார்கள்.

பேய்க் கதைகள் உலகில் அநந்தமுண்டு. ஆனால் அந்தப் "பேயை" கூத்து மேடைகளைத் தவிர, மற்ற எந்த இடங்களிலும் யாரும் பார்த்ததில்லை. அராபிக் கதைகளில் ஒரு பெட்டியிலிருந்து பூதமொன்று புறப்பட்ட கதையை நமது சிறுவர்கள் படித்திருப்பார்கள். அதுபோன்ற கதைகள்தான், குட்டிச்சுவர் பிசாசுக் கதையும், பாழ் வீட்டு பிசாசுக் கதையுமென அறிக.

உயிர், உலகில் ஜனித்து பல கோடி வருஷங்களாகின்றன. மனித உயிர் உலகில் ஜனித்து, சில லட்ச வருஷங்களாயினவாம். கோடான கோடி உயிர்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆன்மா உண்டானால், அந்த எண்ணிறந்த ஆன்மாக்களுக்கு இருப்பிடமெங்கே? கோடி கோடி கோடானகோடி நண்பர்களுக்கு எத்தனை குட்டிச்சுவர்கள், ஒத்தை மரங்கள், பாழ்வீடுகள் வேண்டும்! முப்பத்திமுக்கோடி தேவர்கள் இருக்கின்றார்கள் என்றால் சிரிக்கிறீர்களே, ஏன் இந்த திரு. ஸ்குடட் சொல்லும் கதையைக்கேட்டு நகைக்காமல் ஊக்கத்துடன் இந்த உபயோகமற்ற கதையைப்பற்றி வினவுகின்றீர்கள்.

உயிர் வாழும் மக்களுக்கு அருந்த உணவு இல்லாமலும், இறந்தால் வாய்க்கு அரிசிகூட இல்லாமல் நம்மைச்சுற்றி கோடான கோடிமக்கள் இருந்து வருகையில் அதனைப் போக்க உங்கள் மனதை செலுத்தாது குட்டிச் சுவரில் பேயுண்டா? பாழ்வீட்டு படியில் பெட்டி சத்தம் கேட்டதா? கொலையுண்டவனின் ஆன்மாவா அதனைச் செய்திருக்கும்? என்ற சிறுவர் நகைக்கத்தகுந்த கேள்விகளைக் கேட்கப்புகுந்தீர்களே? இது என்ன கோரம்?

இந்தக் கதைகளில் சிறியதோர் உண்மையுண்டு. அது யாதெனில் மூடநம்பிக்கை அதிகரிக்க அதிகரிக்க அதனால் ஒரு மயக்கம் உண்டாகின்றது. பேய்கள் ஆடுகின்ற மாதிரியாகவும், இறந்தவர்கள் பேசுகின்றமாதிரியாகவும் கண்களுக்கும் காதுகளுக்கும் தோன்றும், கேட்கும். பக்தியால் வெறிகொண்டவர்களுக்கும் 'சிவன்' பிரசன்னமாகி ஆட்கொண்டதாகவும், விஷ்ணு கருடவாகன ரூபராய் காட்சி கொடுத்ததாகவும், ஏசு மரித்தெழுந்ததாகவும் தோன்றும். இந்த காட்சிகள் ஓர்வித மனமயக்கத்தால் உண்டாவது சகஜம். இதனை, மன மயக்கம், மன பித்தர் என்று வழங்குவார்கள். இதனைப்போன்றே பேய், பூதங்கள் உண்டென நம்புகின்றவர்களுக்கு குட்டிச்சுவர் பேய்களாகவும், பாழடைந்த வீடுகள் பிசாசுகளுக்கு இருப்பிடமாகவும், அகால சப்தங்களுடன் வெள்ளை சேலைக்காரியும், உப்பாடைக்காரியும் தோன்றுவார்கள். இத்தோற்றங்கள் மனமயக்கால் உண்டாகின்றனவேயொழிய உண்மை அல்ல. இதனை வேதாந்திகள் மாயை என்றும் கூறுவர். 'கட்டையில் கள்ளனை பார்ப்பதுபோலவும், கிளிஞ்சியில் வெள்ளியைக் காணுவதைப்போலவும் கானலில் நீர் அருந்துவதைப் போலவும், பாழ்வீட்டில் பேயையும், பிசாசுகளையும், செத்தவர்களைப் பார்ப்பதாகும். 'மிரண்டவனுக்கு இருண்டதெல்லாம்பேய்' என்ற பழமொழியைக் கேட்டதில்லையா? நமது அஞ்ஞானமொழிந்து, மெஞ்ஞானம் பெருக வேண்டுமானால் கலம சூத்திரத்தில் புத்தர் சொன்ன வாக்கியத்தை கவனியுங்கள். "தேவன் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், 'பாட்டன் பூட்டன் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், பெரியோர் குருமார் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், 'வேதபுத்தகங்களில் சொன்னதினாலேயே நம்பாதீர்கள், 'ஒவ்வொன்றையும் விசாரியுங்கள்.' உங்கள் யுக்திக்குப் பொருந்தி இருந்தால் யாவர் நன்மைக்கும் உவந்திருந்தால் அதனை நம்புங்கள் அதனைக்கையாளுங்கள்."

★

செங்கற்பட்டு மாவட்ட
தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மாநாடு

சைதாப்பேட்டை ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியில் பிப். 20, 21 சனி, ஞாயிறுகளில் ஷை மாநாடு நடைபெறும் முதல் நாள் மாலை பிரதிநிதிகள் மாநாடு திரு. எஸ்.கே. கோவிந்தராஜன் தலைமையில், 'ஆரம்பக்கல்வி' ஆசிரியர் திரு. பி. வீரராகவன் திறந்துவைக்க நடைபெறும் இரண்டாவது நாள் திரு. டி. புருஷோத்தம் தலைமையில் திரு. ராஜாராம் ஆரம்பித்துவைக்க ஆசிரியர்கள் மாநாடு நடைபெறும். திருவாளர்கள் எஸ். கே. சர்மா, வி. நடேசன், வில்லியம்ராஜ், சிவக்குமார் முதலியோர் பேசுவர். அனைவரும் வருகை தருமாறு வரவேற்புக் கழகத் தலைவர் சி. பாலசுப்பிரமணியனும், செயலாளர் எ. இராதாகிருஷ்ணனும் அழைக்கிறார்கள்.

[சிந்தனைக் கதை]

ஏதனால்?

'அ'

அந்த ஆசை, அதிகமாகிக் கொண்டே வந்தது, அன்னத்துக்கு.

தோட்டத்துக்குள் நுழைந்ததும் ஓடோடியும் போய், அங்குதான் நிற்பாள். இதைப்பற்றி, இருளனும் சிகப்பியும் கோபமில்லை.

'என்னடீ! தங்கச்சி அங்கேயே போய் நிக்குது?'

'வண்ணாத்திப்பூச்சி—தத்துக்கிளி பிடிச்சு விளையாடும்!''

'அதுக்கு, அங்கேதான் போகணுமா?'

'குழந்தை எங்கே போவுது? அடுத்த தோட்டத்துக்குப்போய், அதை, இதையா பறிக்குது—நம்ப தோட்டத்திலே, எங்கே நின்னா என்ன!'

'எங்கே நின்னா என்ன! அதுக்கு சொல்லலே; அங்கே என்னா வச்சிருக்குன்னுதான் போய்ப்பார்த்தேன்!'

சிகப்பி, சென்று பார்த்தாள்—ஒருநாள். அன்னம், அங்கே படர்ந்திருந்த பறங்கிக் கொடியில் பழமாகும் தருணத்தில் கிடந்த காயை எடுத்து பூமியில் படாமல் செங்கல்லால் முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த சிகப்பிக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை! பூரிப்புடன், புருஷனிடம் விஷயத்தைச் சொன்னாள்!!

காலை மலர்ந்தது முதல், மாலை சாயும்வரை, இருளனும் சிகப்பியும் அந்தத் தோட்டத்தில்தான் கிடப்பர். ஏனெனில், அந்தத் தோட்டம்தான் அவர்கள் குடும்பச் சொத்து. அதிலிருக்கும் ஊருணிதான் கடவுள். இருளன் நீரிறைக்க—அதனைப் பாத்தி கட்டி—செடிகளுக்குப் பாய்ச்சுவாள், சிகப்பி! உழைப்பிலே மலர்கின்ற குடும்பம் அது. அங்குதான் அன்னம் பிறந்தாள். பிறந்த நாள் முதல், அவளுக்கும் தோட்டம்தான் வீடு; மரநிழலதான் தொட்டில்; நீர் இறைக்கும்போது இருளன் பாடும் 'பாட்டு'தான் தாலாட்டு. இவ்விதம் வளர்ந்த அவளுக்கு, தோட்டத்தின்மீது ஆசையும், செடிகள்மீது பிரியமும் ஏற்பட்டதில் வியப்பில்லை. ஆனால், அந்தப் பறங்கிக்காயிடமட்டும் அவளுக்கு இவ்வளவு ஆசை அதிகரிப்பானேன்! அடிக்கடி அதையே போய்ப் பார்ப்பானேன்!!

*

இருளனும், சிகப்பியும்தான் இப்படி வாழ்ந்து கொண்டிருந்தார்களே தவிர, அவர்கள் ஊர் அதிசய சுந்தரமுதலியார் வாழ்ந்து கொண்டிருந்த விதம், வேறு. இருளன் குடிசை போன்றதாகவா, அந்தச் சீமானின் வீடு, இருக்கும்? ஒரு குடம், நீரையிறைக்க, இருளன் இவ்வளவு பாடுபடுகிறானே! அவர் வீட்டு 'நீர்மாளிகை'யின் உச்சியில், நூற்றுக்கணக்கான குடங்களால் கொண்டுபோய்க் கொட்டப் பட்ட, தண்ணீர்கிடக்கும். யாரோ, டாக்டர் சொன்னாராம்! வெயிலின் கொடுமையைத் தவிர்க்க, நீரின் அருகிலிருக்கவேண்டுமென்று. அதற்காக முதலியார் கட்டிய மாளிகைதான், 'நீர்மாளிகை.' பெயர்தான் 'மாளிகை'யேயொழிய, அது ஒரு சின்னஞ்சிறு மாடிவீடு எனலாம். அந்த மாடியும் மிகமிகச் சிறியது. அந்த மாடியைத் தொட்டிபோல, ஆக்கியிருந்தார், முதலியார். அதனுள் கொண்டுபோய்த் தண்ணீரைக் கொட்டி நிரப்புவார்கள். அந்த மாடிக்குக் கீழே உள்ள, அறையில், அவரும் அவர் மனைவி சந்தானலட்சுமியும் வெயில் காலத்தில், இருப்பார்கள். டாக்டரின் யோசனையை இந்த விஷயத்துக்கு மட்டும் முதலியார் ஏற்றுக் கொண்டாரே ஒழிய, தன் மனைவிக்குக் குழந்தை பிறப்பது சம்பந்தமாக டாக்டர் சொன்ன யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு அவர், ஆனந்த கிருஷ்ணய்யரைத்தான், யோசனை கேட்டார். அதன்படி நடந்தார்.

மார்கழிமாதம் முழுமையும், தினசரி காலையில் பஜனை செய்ய வேண்டும்—ஊரின் நான்கு வீதிகளிலும் வலம் வரவேண்டும்—இப்படி. அந்த மாத முழுமையும் செய்துவிட்டு, தை முதலில், அம்மாவும் ஐயாவும் திருப்பதிக்குப் போகவேண்டும் — அப்போதுதான், 'குழந்தை பிறக்கும்' என்பதுதான், அந்த யோசனை.

'அவசியம், செய்யவேண்டும், முதலியார்வாள்! என்ன, ஏதுன்னு, நினைக்காதங்கோ. நான் சொல்ற இந்த ஏற்பாட்டிலே, இரண்டு விஷயம் அடங்கியிருக்கு. பெரிய பணக்காரங்க வீட்டிலே மட்டும் குழந்தை பிறக்காமெ, ஏழைங்க வீட்டிலே எட்டு ஏழுன்னு குழந்தையா உதிர்றதே? என்னகாரணம் தெரியுமோ? அவா, உழைக்கிறா! இவா, உழைக்கிறதில்லே!! இது, சயன்ஸ். இந்த சயன்ஸ்— அதே நேரத்திலே நம்ப பகவத் கடாட்சம் இரண்டையும் 'மிக்ஸ்' பண்ணித்தான், இந்த 'ஐடியா'வே, சொன்னேன். நேக்கு என்னமோ, தங்கள் ஆத்துலே, ஒரு குழந்தைச் சப்தம் கேட்காதான்னு ஒரு சபலம். சொன்னேன். உங்க இஷ்டம் எப்படியோ, அப்படிச் செய்யுங்கோ— என்று ஆனந்தகிருஷ்ணய்யர் சொன்ன வார்த்தைகளிலிருந்த அர்த்தத்தை விட, அவர் சொன்ன முறை, முதலியார் மனதிலும் சபலத்தையுண்டாக்கிற்று. யோசனையை, உடனே ஏற்றுக்கொண்டாள், சந்தானலட்சுமி. இதனால், அந்த ஊரில், அந்த மாதம் முழுமையும், காலையில் ஜாலராச்சப்தம் ஒலிக்கத் துவங்கிற்று. பக்திசிரத்தையோடு, திருப்பாவையை மனனம் பண்ணிக் கொண்டு, பண்டாரங்களோடு வலம் வரலானாள். பண்ணையாரின் பத்தினி, பஜனை செய்கிறாளென்றால், சாதாரணமாகவா, இருக்கும்? அதுக்குத்தக்க, ஆடம்பங்களும் இருந்தன! சுற்று வட்டாரத்தில் கிடந்த 'பாகவதர்'களெல்லாம், 'சுருதிப்பெட்டி' சகிதம் கூடிவிட்டனர்.

*

இந்தக் கோலாகலத்தைக் கண்டதால்தான் குழந்தை அன்னத்துக்கு, பறங்கிக் காயிடம் அவ்வளவு ஆசை உண்டாயிற்று. அதற்குள்ள, காரணம், இது:

'ஏம்மா! இப்படி, தினம் தினம், ஆடிப் பாடறாங்க......'

'அவுங்க, திருப்பதிக்குப் போகப் போறாங்க!'

'திருப்பதின்னா, என்னம்மா?'

'அது ஒரு ஊரு!'

'எங்கேம்மா, இருக்கு?'

'ரொம்பத் தூரத்திலே, இருக்கு!'

'அங்கே, ஏம்மா, போகப் போறாங்க?'

'இதென்னா, கேள்வி, தங்கச்சி!'

'சொல்லுமா! ஏன், போகப் போறாங்க......'

'அவுங்களுக்கு குழந்தை இல்லே—அதுக்காகப் போகப்போறாங்க....'

'அங்கே,குழந்தை யிருக்காம்மா!'

'என்னாது?'

'நீ சொன்ன ஊர்லே, குழந்தை யிருக்கா— இவுங்க, போனதும், கொண்டார!'

'இதென்னா கேள்வி, தங்கச்சி!'

'சொல்லும்மா......ம்......ம்...'

'அங்கே குழந்தை இல்லே; சாமி, இருக்கு. சாமியைக் கும்பிட்டா, இவுங்க வீட்லே, குழந்தை பிறக்கும்'

'சாமி—ன்னா, என்னம்மா?'

'என்னாது?'

'சாமீ! அப்படின்னீயே, அது, என்னம்மா?'

'சாமீன்னா, கடவுள்...'

'அப்படீன்னா...'

'இப்படியெல்லாம், கேட்கக் கூடாது— கண்ணுல்ல!— வா, தோட்டத்துக்குப் போகலாம்'

'நீ, சொன்னாத்தான், வருவேன்!- சொல்லும்மா...ம்...ம்...சொல்லு'

'என்ன எழவு!' என்று சொல்லியபடியே, சிகப்பி, கூறினாள்.

'கடவுள்னா— நம்ப எஜமான்!'

'எஜமான்— அப்படீன்னா...'

'நம்ப பெரிய பண்ணை, ஐயா வேப்போலே, பெரிய ஐயா., இவுரு, இந்த ஊருக்கு ஐயாவாயிருக்கிறதைப்போலே, இந்த உலகத்துக்கெல்லாம், அவரு ஐயா'

'அந்த ஐயாவை, நாம்ப, போய்ப் பார்த்துட்டு, வந்தா, என்னம்மா!'

இந்தக்கேள்விக்கு, என்னபதிலைக் கூறுவாள், சிகப்பி! சிறிது நேரம், யோசித்தாள். பிறகு, தெரிவித்தாள்.

'தங்கச்சி! நாம்ப, அங்கே போக வேண்டியதில்லை. அவர் கொடுத்த சொத்து இருக்கே— அதை, ஜாக்ரதையா வச்சு, தண்ணி ஊத்திகாப் பாத்தினா, போதும்— அந்த ஐயா, சந்தோஷப்படுவார். நம்ப தோட்டத்திலே யிருக்கிற, எல்லாம், அந்த ஐயா, கொடுத்ததுதான்— அதைக் கும்பிட்டா, போதும்'

'அப்படீயா, அம்மா!'— என்று ஆனந்தத்தோடு, கேட்டாள், குழந்தை. திடீரென ஒரு சந்தேகம், வந்துவிட்டது. குழந்தையின் உள்ளத்தைத் திருப்திப்படுத்துவதென்பது, எளிதான விஷயமா?

"ஏம்மா, எல்லாம் அந்த எஜமானுக்குச் சொந்தமா?"

'ஆமாம்!'

'நம்ப, ஊரணி?'

'அவருடையதுதான்'

'ஏற்றம்?'

'அவர், கொடுத்ததுதான்'

'இந்தத் தோட்டம்!'

'அவர் தந்ததுதான்!'

'ஏம்மா! இந்தப்பறங்கிக்காய்...'

'அதுவும் தான்!'

இதற்குமேல், சிகப்பிக்கும் பொறுமை தாங்கமுடியவில்லை. 'சும்மாயிரு, கழுதே!,' என்று அன்னத்தின் முதுகில், ஒன்று வைத்தாள். அன்னத்திற்கு, அழுகை வந்துவிட்டது! ஆனால், அன்னை சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும், ஆழப்பதிந்துவிட்டது, உள்ளத்தில், அதனால்தான், அனுதினமும், தோட்டத்துக்குள் ஓடி, அந்தப் பறங்கிக்காயைப் பார்த்துக் கொண்டிருந்தாள்—அவ்வளவு, ஆசையோடு.

* * *

மார்கழி மாதம் முடிந்தது. ஆனந்தகிருஷ்ணய்யர் யோசனைப்படி, பண்ணையாரின் பத்தினி, திருப்பதிக்குப் புறப்பட்டுவிட்டாள். பக்தர்களின் கும்பலோடு, பஜனை பாடியவண்ணம் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தனர். அதைக் கண்ட குழந்தையின் மனதில் ஒரு ஆசை உண்டாயிற்று. "நாம்தான் பெரிய எஜமானைப் போய்ப் பார்க்க முடியவில்லையே! இந்தப் பறங்கிக்காயையாவது அவருக்குக் கொண்டு போய்க் கொடுக்கச் செய்வோம்!" என்பதுதான் அந்த ஆசை. தோட்டத்துக்கு ஓடி, காயைப் பறித்துக் கொண்டாள். பஜனைக் கும்பலை நோக்கி ஓடினாள். "சாமீ! சாமீ!! இதைக்கொண்டுபோய் பெரிய எஜமானிடம்—நான் கொடுத்தேன்னு, கொடுங்க சாமீ!," என்று கூவிக் கொண்டே ஓடினாள். கோவிந்த நாம சங்கீர்த்தனத்தை உரக்க உச்சரிப்பதில் ஆழ்ந்து — ஆடிப்பாடி ஓடிக்கொண்டிருந்த— அவர்கள் காதில், குழந்தையின் குரலா, கேட்கும்? அவர்கள் சென்றுகொண்டிருந்தனர்! குழந்தை நெருங்கினாள்—காயை, நீட்டினாள். ஒரு பாகவதரின் தம்புரா, வேகமாகப்பட்டு பறங்கிக் காய் கீழே சாய்ந்தது. தூள், தூளாகச் சிதறிற்று. அதைக் கண்ட குழந்தை 'ஐயோ' என்று அலறினாள்! அவர்கள் வெகு தூரம் போய் விட்டனர்!! அழுதபடியே, உடைந்து சிதறிய காயைப் பொறுக்கிக்கொண்டு தோட்டத்துக் குடிசைக்குத் திரும்பினாள். [படுத்தாள்.

பறங்கிக் காயின் நினைவாகவே பிதற்றிக்கொண்டிருந்தாள். இருளனும், சிகப்பியும் ஏதும் புரியாமல் விழித்தனர். எங்கெங்கோ யிருந்த சாமிக்கெல்லாம் வேண்டிக்கொண்டனர்—திருநீறு பந்திரித்தனர் — பிசாசு ஓட்டினர். ஆனால் குழந்தை பிதற்றியபடியே கண்ணை மூடினாள்! 'ஐயோ—தங்கம்' என்று சிகப்பி அழுதாள். இருளன், புரண்டான். இருவருக்கும் அன்னத்தின் உயிர் போனதற்கு எது காரணம் என்பது இன்னும் தெரியாது! தோட்டத்தில் பிசாசு அடித்துவிட்டதாக அழுதபடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்!!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கும். பெயரளவிலும் அதிகவித்யாசம் கிடையாது. எல்.ஜி. பெருங்காயம், எல். பி. பெருங்காயம் போன்ற சிறு வித்யாசம் தான். அதாவது ஒன்று ஆரம்பக் கல்வி, இன்னொன்று ஆதாரக்கல்வி. ஆரம்பக் கல்வியின் உற்பத்தியாளர் சேலம் சீமான் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரி அவர்கள். ஆதாரக் கல்வியின் உற்பத்தியாளர், வார்தா ஸ்ரீஜத் எம். கே. காந்தி அவர்கள். ஆரம்பக் கல்வி என்ற புதிய சரக்கு, ஆச்சாரியாரின் ஐம்பதாண்டுச் சொந்த அனுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. ஆதாரக் கல்வி காந்தி அடிகளின் பொது அனுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. முதலில், மார்க்கட்டுக்கு வந்த சரக்கு ஆதாரக் கல்விதான். என்றபோதிலும், என்ன காரணத்தாலோ அது விற்பனையாகாமல் கிடங்கிலேயே முடங்கிக் கிடக்க நேரிட்டுவிட்டது. பல காலமாகக் கிடங்கில் கிடக்க நேரிட்டபோதிலும், சரக்கு என்னவோ கெடவில்லை. பின்னர், ஆரம்பக் கல்வி என்ற சரக்கு விற்பனைக்கு வந்தது. அந்தச் சரக்குப் புதிய சரக்காயினும் அதில் காணப்பட்ட பல சிறுக் கோளாறுகள் காரணமாக, அதை யாரும் வாங்க முன்வரவில்லை. எனவே, அந்தச் சரக்கை எப்படியாவது விற்றுவிட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டு, அதற்குத் தரகர்கள் தேவைப்பட்டனர். பருளேகர் கமிட்டி என்ற தரகர்கள், அந்தச் சரக்கைப் பரிசீலனை செய்து, அதிலுள்ள கோளாறுகளை எடுத்துக் காட்டி, இவை இல்லையென்றால், ஓரளவு விற்பனையாகலாம். என்றபோதிலும், அது கருதிய இலாபத்தைத் தராது என்று கூறிவிட்டனர். அது மட்டுமல்ல. ஆரம்பக் கல்வி என்ற சரக்குக்கும், ஆதாரக் கல்வி என்ற சரக்குக்கும் தொடர்பு எதுவும் வைத்துக் கொள்ளாத, மத்திய கல்வி போர்டு நிபுணர்கள், ஆரம்பக் கல்வி என்ற சரக்கு, பார்ப்பதற்கு நன்றாக இருப்பதுபோல் தோற்றமளித்தாலும்—அதை வாங்கலாமா என்ற ஆசை சிலருக்கு ஏற்பட்டாலும், சரக்கு என்னமோ மிக மிக மட்டமானதுதான் என்று கூறிவிட்டார்கள். அதாவது, போலிச்சாயம், முதலில் பார்ப்பதற்கு நன்றாகக் காட்சியளிப்பது போன்றதுதான் இதுவும் என்று கூறிவிட்டார்கள். இதோ கெட்டிச்சாயம் போன்றது, காந்தியடிகளின் ஆதாரக் கல்வி ஒன்றுதான், அதனையே எல்லோரும் வாங்கவேண்டுமென்று தீர்த்தும் கூறிவிட்டார்கள். என்றபோதிலும், கிராமங்களிலெல்லாம் சுற்றிப் பார்த்தும், விற்பனையாகாது போன தம்முடைய சரக்கை, இப்பொழுது நகரங்களிலும் கொண்டுவந்து விற்பதற்கு முயற்சி செய்கிறார், ஆச்சாரியார்.

இது, ஆச்சாரியார், காங்கிரசுக்குச் செய்த துரோகங்களில் ஒன்று மட்டுமல்லாமல், தம்முடைய சம்பந்தியும், உலகம் போற்றும் உத்தமருமான காந்தியடிகளுக்குச் செய்யும் மாபெரும் துரோகம் என்பதை, ஆச்சாரியார் அன்பர்கள்—அதுவும் ஆச்சாரியாரைக் கட்டிக் காக்கும் கண்ணியவான்கள்—உணர வேண்டும் என்பதற்காகவே இதனை இங்கு குறிப்பிடுகிறோம்.

காந்தியடிகளால் வகுக்கப்பட்ட ஆதாரக் கல்வித் திட்டம், காற்றில் பறக்கவிடப்பட்டதேன்? ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித்திட்டத்தை அமுலாக்க அரும்பாடு படுவதேன்? ஆதாரக் கல்வியில் காணப்படும் குறைபாடுகள் எவை? ஆரம்பக்கல்வியில் காணப்படும் நன்மைகள் எவை? இவற்றை நாடறியச் செய்யும் நாவன்மை அற்றவர்கள், வறிதே, நம்மைக் குறை கூறித் திரிவதைப் பார்க்கும்போதுதான், நமக்கு அவர்கள்பால் இரக்கமும் கோபமும் கலந்து உண்டாகிறது.

ஆச்சாரியார், இந்த ஆரம்பக் கல்வித்திட்டத்தை அமுலாக்க முயற்சிப்பதை, நோக்கும் எந்தக் காங்கிரஸ் அன்பர்களுக்கும், ஆச்சாரியார், ஏன் நேருவுக்கு மிஞ்சிய சீடனாகிறார் என்று எண்ணத் தோன்றவில்லையே என்று நாம் பெரிதும் வருந்துகிறோம்.

ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் புகுத்தும் ஆச்சாரியார், காந்தியாரின், ஆதாரக் கல்வித் திட்டத்தில் இன்னின்ன குறைபாடுகள் உள்ளன, எனவேதான், நான் நன்மைகள் பல கொண்ட இந்த ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தேன் என்று என்றாவது எங்காவது கூறியுள்ளாரா? நம்மை எதிர்க்கும் காங்கிரஸ் 'நல்லறிவாளர்கள்' இந்த உண்மைகளைச் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? நாம், எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது காங்கிரசுக்கு விரோதமாகச் செய்யப்படும் காரியமென்று ஏன் இவர்கள் எண்ணுகிறார்கள்? காந்தியடிகள் உயிரோடிருக்கும்வரையில், அவரையும் அவரது திட்டங்களையும் வானளாவப் புகழ்வதும், அவருக்குப்பின் வேறொருவரையும் அவரது திட்டத்தையும்—அது காந்தியடிகளின் திட்டத்துக்கு விரோதமானதாக இருந்தாலும்—அதை ஆதரிப்பதும் போன்ற கெடுமதி — நன்றி கொல்லும் செயல் — இதைவிட வேறேதேனும் இருக்க முடியுமா?

இந்த நிலையில்; ஆச்சாரியார் தம்மால் கொண்டுவரப்பட்டுள்ள ஆரம்பக் கல்வித் திட்டத்தை, அமுலாக்க முயற்சிப்பதன் வாயிலாக, தம்மை நாட்டிற்கு அறிமுகப்படுத்தி வைக்கும் முறை இருக்கிறதே, அதுதான் மிக மிக வேடிக்கை. காங்கிரஸ்காரர்கள், ஆச்சாரியாரை அறிமுகப்படுத்துவதைவிட, இது ரொம்பப் பிரமாதம்! அதாவது, தந்தையின் தொழிலைத் தனயன் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்துவதன் வாயிலாக, தம்முடைய திட்டத்திற்கு ஆதரவு தேட முனையும் ஆச்சாரியார், ஒரு காலத்தில், தான் க்ஷவரத் தொழிலாளியாக வேலை செய்ததாகவும், செருப்புத் தைக்கும் தொழிலில் ஒரு வருஷம் ஈடுபட்டு இருந்ததாகவும், சலவைத் தொழிலில் நல்ல அனுபவம் உண்டென்றும் கூறி தம்மை நாட்டிற்கு அறிமுகப்படுத்திக்கொள்கிறார்.

1 நான் ஒரு க்ஷவரத்தொழிலாளி.

2 நான் செருப்புத் தைப்பேன்

3 எனக்கு சலவை செய்யத் தெரியும்.

ஆச்சாரியாரின், சொந்தத்தொழிலுக்குப் புறம்பாக, இந்த மூன்று தொழில்களிலும் நல்ல அனுபவம் உண்டாம். ஆச்சாரியாரின் சொந்தத் தொழில், வேதாகம முறைப்படி—புரோகிதம். ஆனால் அவருக்

குத் தெரிந்திருப்பவையோ, மயிர் களைதல், தோல் பதனிடுதல், துணி வெளுத்தல் போன்ற தொழில்கள். இந்தத் தொழில்களை, அவர், எந்தக் காலத்தில் எங்கெந்த இடங்களில் செய்தார் என்பதற்கு அவர் புள்ளி விவரம் தரவில்லை. இன்ன ஊரில், இன்ன தெருவில், இன்ன நம்பர் உள்ள கட்டிடத்தில் என்னுடைய சலூன் இருந்தது. இன்ன ஊரில் இன்ன தெருவில் இந்த முச்சந்தியில் நான் செருப்புத் தைத்துக் கொண்டிருந்தேன். என்னுடைய லாண்ட்ரி இன்ன இடத்தில் இருந்தது—என்ற விவரங்களை ஆச்சாரியார் தரவில்லை, என்றபோதிலும், இந்தச் செய்திகளைப் படிக்கும் அவரது பக்தகோடிகள், "ஆகா, எமது ஆச்சாரியாரைப் பாருங்கள்; அவர் அந்தக் காலத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்" என்று கூறிப் புளகாங்கிதம் அடைவரேயன்றி, ஆச்சாரியார் ஒரு பார்ப்பன ராச்சே, தந்தை வேலையைத் தனயன் செய்யவேண்டும் என்று கூறுகிறாரே, இவர், ஏன் அந்த வேலையை —அவரது தந்தைவேலையை—புரோகிதத்தை—செய்யாமல், மற்றவர்களுக்குமட்டும் உபதேசம் செய்கிறார் என்று எண்ணிப் பார்ப்பதில்லை. மற்றவர்கள் எண்ணிப்பார்ப்பது ஒருபுறம் இருக்கட்டும். ஆச்சாரியாரே — நானும் ஓர் ஏழைப் பாட்டாளிதான்; எனவே, என்னையும் உங்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று எக்காளமிடும் ஆச்சாரியாரே—தம்முடைய சொல்லும் செயலும் ஒத்துவருகிறதா என்பதை எண்ணிப் பார்க்கிறாரா? ஒரு விநாடி எண்ணிப் பார்த்திருந்தால், இவ்விதமெல்லாம்பேசுவாரா? —பேசமுடியுமா? கெந்ததைத் தின்று, வந்ததைப் பேசும் வாட்டு வேதாந்தியைப்போல், பேசும் இவரது உள்ளெண்ணம் என்ன தெரியுமோ! இதோ அவரே கூறுகிறார்.

"எவ்வளவோ சிரமங்களுக் கிடையில், புராதன தர்மத்தை மீண்டும் நிலைநாட்ட முயற்சித்து வருகிறேன். அனைவருடைய ஒத்துழைப்பும் இருந்தால், அது விரைவில் நிறைவேறும்!!

இதுதான், ஆச்சாரியாரின் அவா. இதை நிறைவேற்ற அனைவருடைய ஒத்துழைப்பும் தேவையாம்! புராதன தர்மம் மீண்டும் தலைதூக்க வேண்டுமாம்! எது புராதன தர்மம்? சிந்தித்துப் பாருங்கள்—தெளிவு பிறக்கும்.

[நடப்பது]

உத்ராபதி

ஒருநாள் கண்ட காட்சி!

"பலகோடிநாதப்பிள்ளை பங்களாவுக்குப்போய், இதைக்கொடுத்து விட்டுவா!", என்று 'ஜெண்ட்ஸ் டைலர்' சிதம்பரம், உத்ராபதிக்கு உத்திரவிட்டான்.

உத்ராபதி, சின்னஞ்சிறு பையன் —வயதுபன்னிரண்டிருக்கும். தயங்கியபடியே, பங்களாவுக்கெதிரில் போய், நின்றான். எல்லோருடைய வீட்டுக்குள்ளும்போய் நிற்பதுபோல, அவருடைய பங்களாவுக்குள் போய் நிற்க முடியுமா? தர்வானைத் தாண்டி, உள்ளே சென்றபோது, மணி 10. போய் நின்றதும், கார் டிரைவர் கந்தப்பன், விசாரணை நடைபெற்றது.

கந்:- யாரப்பா, நீ? எங்கேவந்தே!

உத்:- 'ஜெண்ட்ஸ்டைலர்' அனுப்பினாருங்க! எஜமானியம்மாக்கிட்டே இதைக் கொடுக்கணும்......

கந்:- இங்கேயே, இரு!

கந்தப்பன் உத்திரவுப்படி, அங்கேயே நின்று கொண்டிருந்தான். மணி 10½ ஆயிற்று. பலர் வருகின்றனர்—காரை விட்டிறங்கி உள்ளே போகின்றனர் — திரும்புகின்றனர். யாரும், இவனொருத்தனிருப்பதாகவே, எண்ணவில்லை. மணி 11 ஆயிற்று. பியூன் பிளுகசாமியின் விசாரணை, இப்போது.

பி:- யாரடாது? என்ன செய்றே, இங்கே!

உ:- ஒண்ணும் செய்யலீங்க...

பி:- பின், ஏன், இங்கிருக்கே? போ! போடா!!

உ:- எஜமானியம்மாவைப்பார்க்கணுமுங்க......

பி:- எதுக்குங்க?

உ:- 'ஜெண்ட்ஸ்' டைலர், அனுப்பினாருங்க!

பி:- அப்படியா? இரு...இரு... வருவாங்க!

மணி 12 ஆயிற்று. யாரும், வரவில்லை. நின்றபடியேயிருக்கும் அவனுக்கு கால் கடுக்க ஆரம்பித்து விட்டது! வழ, வழ என்றிருக்கும் தரையில் உட்கார்ந்தால் திட்டுவார்களோ—என்ற பயம். இப்படி நிற்பதும், அப்படியிருப்பதுமாகக் கூத்தவத்தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறான்! அப்போது 'கிரீச்' என்ற சப்தத்துடன் கதவு திறக்கவே, திடுக்கிட்டு, தயாராக நின்றான், பங்களா வேலைக்காரி பார்வதி, வந்தாள் —பையனை, ஏற இறங்கப் பார்த்து விட்டு—

பார்:- தர்வான்! யாரது? ஐயாவுக்குத் தெரிஞ்சா கோபம் வரும்னு தெரியுமில்லே, உனக்கு...நீ, இப்படி வேலை பார்த்தா...கடைசியிலே வீட்டுக்குப் போகவேண்டியது தான்......

தர்:- அட! பெரிய எஜமானியாட்டம், வந்துட்டியே...என் வேலையைப் பார்த்துக்க, எனக்குத் தெரியும்......

[இந்த நேரத்தில் டிரைவர் கந்தப்பன் வரவே, அவனிடம்...]

உள்ளே வேலை பார்க்கிறோம், என்கிற மவுசு! பாரு, கந்தப்பா, இவள் என்னை மிரட்ட வர்றா?

பார்:- இந்தாப்பாரு! இவள்—அவள், அப்படீன்னு பேசினா, அப்புறம் என்வாய், சும்மாயிருக்காது!

தி. மு. கழக
பொதுக் குழுக் கூட்டம்

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் 7—3—1954 ஞாயிறன்று திருச்சியில் கூடும். விபரம் அடுத்த அறிக்கையில்.

அண்ணாதுரை
பொதுச் செயலாளர்.

டிரை:- ஏன், தங்கச்சி! என்ன செய்யுமாம்?

[இவர்கள், சண்டை போட்டுக் கொண்டிருக்கும்நேரத்தில் உள்ளேயிருந்து,'டிரைவர்!டிரைவர்!!' என்று குரல் கொடுத்தபடியே, பலகோடியாரின் மகள் பத்தினிதேவி வருகிறாள். அவள் குரலைக் கேட்டதும், வேலைக்காரி ஒரு பக்கம், ஓடுகிறாள். தர்வான், நிமிர்ந்து நிற்கிறான். டிரைவர், சாதாரணமாக எதையும் லட்சியம் செய்யாதவன்போல இருக்கிறான். உத்ராபதி—மிரண்டு விழிக்கிறான். 'டிரைவர்!' என்றகுரல் கேட்கவில்லை, இப்போது]

தர்:- என்னண்ணே! உன்னை, எஜமானியம்மா,கூப்பிடறாங்கபோலிருக்கே......

டிரை:- கூப்பிட்டா, என்னப்பா! ஓடிப்போயி, அவுங்க, எதிரே ஆடணுமோ...கையிலே தொழிலிருக்கறப்ப, ஏம்பா பயப்படணும் — நீ ஒரு பீடி கொடு!—இவுங்க, யாருக்குப் பயப்படலேன்னாலும் நம்பகிட்டே, பயப்படணும். ஏன்னு!— அந்த இரகசியம் எல்லாம், உனக்கு ஏன்?

[இப்போது மணி 1 ஆகிறது. உத்ராபதிக்கு வயிறு கிள்ள ஆரம்பிக்கிறது. வந்தவேலையை முடிக்காமல் போனாலோ, எஜமான்காதைப்பிடித்துத் திருகுவார்—கஜக்கோலால் அடித்தாலும் அடிக்கலாம். அதை நினைத்தபடி, தவித்துக் கொண்டு நிற்கிறான். அப்போது, 'சார்! சாப்பிட்டுப்போகலாமே!', என்றோர் குரல் கேட்கிறது. அதைத் தொடர்ந்து இன்னொரு பேச்சுக்குரலும், கேட்கிறது. தர்வான் — எல்லோரும், மிரண்டபடி நிற்கின்றனர். உத்ராபதியிடமும், 'எஜமான் வருகின்றார்', என்கின்றனர். உத்ராபதி முகத்தில், கலக்கம்—பயம்— எல்லாம்]

எஜமான்:- சார்! இவ்வளவுநேரம் நீங்களும் நானும் பேசியும் இன்னும் ஒரு முடிவுக்குவரல்லே—அதனாலே —நாளைக்கும் அவசியம் வரணும்... சித்தாந்தத்துக்கும் வேதாந்தத்துக்கு முள்ள தாரதம்யங்களைப் பற்றி, இன்னும், விளக்கமா விவாதிக்கணும்...

அவர்:- நாளை!நாளை!—என்னாதே என்றார்கள், பெரியோர். இதையே நமது வேதாந்தமும் கூறுகிறது. உதாரணமாகச் சொல்கிறேன்—ஒரு நாட்டின்மீது எதிரி, யுத்தம் துவங்கி, படையெடுத்து வந்து விடுகிறான். அப்போது அந்த நாட்டின் ராஜா, எதிரிப்படைகளே! இருங்கள் நாளை, வருகிறேன்' என்று கூறமுடியுமோ? அதுபோலத்தான் இதுவும்! இதைத்தான் நெப்போலியன்—அவனைத் தெரியுமே? மகாவீரன்! உலகத்தையே ஒரு குடைக்கீழ் ஆளமுயன்றான்-சொல்வானாம். அவன் என்ன! ஹிட்லர்—அவனை ஒரு சர்வாதிகாரி என்பார்கள். ஏன், சார், சர்வாதிகாரியாகயிருப்பது தான், என்னைக் கேட்டால், நல்லதென்பேன்... பாருங்கள்! நம்பாரதபூமியில்......

எஜ:- யார், இந்தப்பையன்?

[என்று, கூட வந்தவரின் 'பேச்சுச்சுமை'யைத் தாங்கமுடியாத பலகோடிநாதர், உத்ராபதியைப் பார்த்துக் கேட்கிறார். டிரைவர்-தர்வான் —எல்லோரும் ஒரேநேரத்தில், பதில் கூறுகின்றனர். எஜமான், உத்ராபதியை ஒரு பார்வை பார்த்து விட்டு......]

கொஞ்சம், ஒதுங்கியிருக்கச் சொல்லு!..... அப்புறம்........சார்! நீங்க போய்வரீங்களா?

[மணி 1½ ஆகிவிட்டது. உத்ராபதிக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த நேரத்தில், வெளியிலிருந்து பலகோடியாரின் மகன், பலராமனைத் தேடிக்கொண்டு அவன் நண்பன் வருகிறான். அதே நேரத்தில் வெளியில் செல்லுவதற்காகப் புறப்பட்ட பலராமனும் வருகிறான். இருவரும், பங்களாவின் வாயிலிலேயே சந்திக்கின்றனர்.]

பல:- ஹலோ! மிஸ்டர், காந்த்... வாங்க...வாங்க. விஷயம் முடிஞ்சிதா?

காந்த்:- எல்லாம், வாங்கி வந்துட்டேன்! 'ஜாக்கி'யோட அண்ணனோடு மச்சானுக்கிட்டேயிருந்தே ஆள்வந்துச்சு! எந்தெந்த குதிரை ஜயிக்கும் என்கிற லிஸ்டையே வாங்கிவந்திருக்கேன்!!

பல:- அதெப்படி, பிரதர் இப்பவே, சொல்ல முடியும்!

காந்:- அந்தக் கவலையெல்லாம் உனக்கு வேண்டாம்...எங்கே, 'தேஷ்முக்'?

பல:- யாரு?

காந்:- அதாம்பா, வெள்ளையப்பன்!

பல:- எவ்வளவு வேணும்!

காந்:- இரு நூறு!

பல:- எம்பா!

காந்:- அட நீ, என்னப்பா...அவனவன் ரேஸ்ன்னு ஆயிரக்கணக்கிலே செலவழிக்கிறான்...நீ, என்னமோ......

பல:- சரி! இங்கேயே இரு...... அம்மாவைப் போய்க் கேட்டுப் பார்க்கிறேன்...

[என்று திரும்புபவன் கண்ணில் உத்ராபதி, தென்படுகிறான். பசியால் களைத்த பையன், தூங்கி விழுந்து கொண்டிருக்கிறான், 'யார்டா, இவன்?', என்ற பலராமனின் குரல் கேட்ட, உத்ராபதி அலறியடித்தவண்ணம்......]

உத்:- சார்! எஜமானியம்மாவை பார்க்க, காலையிலேருந்து காத்துக் கிட்டிருக்கேன்......

பல:- ஏன்?

உத்:- 'ஜெண்ட்ஸ் டைலர்', இதைக் கொடுத்துட்டு வரச் சொன்னாருங்க!

[மூட்டையை வாங்கிப்பார்க்கும் பலராமன், நண்பனைப் பார்த்து...]

பல:- பிரதர்! இதைப்பார்த்தா, சிஸ்டர் இருக்காளே, பத்தினிதேவி விடமாட்டா... அம்மாகிட்டேருந்து பணம் பறிச்சிடுவா...நான் அதற்குள் போய் வந்து விடுகிறேன்......

[என்று உள்ளே ஓடுகிறான். அவன் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம், பத்தினிதேவி வருகிறாள். வந்தவள், கண்ணில் மிஸ்டர் காந்த்,தென்படவே,]

பத:- அடடே! நீங்களா........ உள்ளே, வாருங்களேன்...

கா:- பரவாயில்லே!

பத்:- இந்த வேலைக்காரப்பசங்களுக்கே புத்தியிருக்கிறதில்லே... ஏண்டா! தர்வான்.........ஐயாவே, ஏண்டா, நிறுத்திவைச்சே...வாங்க, உள்ளேபோகலாம்......

காந்:- பரவால்லீங்க...

பத:- அதெல்லாம் முடியாது! ஒரு 'கப்' காப்பியாவது சாப்பிட்டு விட்டுத்தான் போகணும்!!

[நீண்டநேரமாகக் காத்திருந்து களைத்துப்போன உத்ராபதி, மெது வாகத்துணிந்து, 'அம்மா! என்னைக் கொஞ்சம் கவனிங்க!' என்று கூறுகிறான். அவன் குரலைக்கேட்டுத் திரும்பிய பத்தினி—]

பத்:- யாரடா, நீ?

உத்:- காலையிலே வந்தேங்க! எஜமானியம்மாவே, பார்க்க! காத்துக்கிட்டேயிருக்கேன்.......'ஜெண்ட்ஸ் டைலர்' திட்டுவாருங்க.........

[என்று சொல்கிறான். அவன் வைத்திருக்கும் 'டிரஸ்'மூட்டையை வாங்கிப் பார்த்துவிட்டு.]

பத்:- மிஸ்டர் காந்த்! எல்லாம் எவ்வளவு நல்ல பாஷனாயிருக்கு! இதையெல்லாம் நான் போட்டா எப்படியிருக்கும்?

காந்:- ஆகா! சொல்லணுமா...... உங்க உடம்புக்கு எதைப்போட்டாத்தான் என்ன!

உத்:- அம்மா! கொஞ்சம், என்னைக் கவனிங்க......

பத்:- என்னடா, அவசரம்? இருடா! பெரிய ஆபீசராட்டமாத்தான் அவசரப்படுறது! நீங்க, வாங்க, மிஸ்டர் காந்த்......

[என்று உள்ளேபோகிறாள். அந்த நேரத்தில், கையில் நோட்டுடன் பலராமன் இறங்கிவருகிறான். அவனோடு, எஜமானியம்மாளிருக்கிறாள். அவள்பின்னே, டாக்டர் ஒருவர், இருக்கிறார். எல்லோரும் வெளியே, வருகின்றனர்.]

எ:- டாக்டர்! ராத்திரிக்கு ஒரு தடவை.........இந்த மருந்தை சாப்பிட்டா போதுமா......

டாக்:- ஓ. எஸ்! போதும்...

எ:- எல்லாத்துக்கும் நீங்க ராத்திரிக்கு வாங்க...ஏதோ!......நீங்க வந்துபோறது, என் மனசுக்கு திருப்தியாயிருக்கு......

டாக்:-ஓ! எஸ்!!

எ:- காத்துக்கிட்டேயிருப்பேன்!

டாக்:- ஆல்ரைட்!

[என்று அவர் போய்விடுகிறார். தன் நண்பனைக் காணாத பலராமன், விழிக்கிறான். பக்கத்தில் தாயிருப்பதால், யாரையும் கேட்கவில்லை! வேகமாக, வெளியே போகிறான். எஜமானியம்மா, கண்ணில் உத்ராபதி தென்படுகிறான்]

எஜ:- ஏய், தர்வான்! யாரது, இந்தப் பிச்சைக்காரன்? 'கேட்'டுக்கு வெளியே நிறுத்தாமெ...... ஏண்டா!

தர்:- உங்களைப் பார்க்க வந்தாம்மா!

உத்:- ஆமாம்மா! காலை 10-மணியிலேருந்து 4-மணிவரையா காத்திருக்கேன்.........

எஜ:- ஏன்?

டிரை:- 'ஜெண்ட்ஸ் டெய்லர்' கிட்டே, நேற்று போய், நம்மதானே, ஆர்டர் கொடுத்துட்டு வந்தோம்.........

எஜ:- சிதம்பரம் அனுப்பிச்சானா?

உத்:- ஆமாங்க!

[என்று தான் கொண்டுவந்தவைகளை எடுத்து வைக்கிறான். அவைகளைப் பார்க்கிறாள், எஜமானி. 'என்ன சொல்வாளோ?' என்று எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறான், உத்ராபதி.]

எஜ:- ஏய்! இதையெல்லாம், கொண்டுபோய், அவன் மூஞ்சியிலேயே போடு.........இதாடா, பாஷன்! நான் ஒண்ணு சொன்னா, அவன் ஒண்ணு செய்றான்......சுத்தப்பட்டிக்காடு! போடா போ...... போய்ச் சொல்லு, அவனிடம்......

திகைத்த உத்ராபதி, எல்லாவற்றையும் அடுக்கிக்கொண்டு திரும்புகிறான். மாளிகையின் மாடியிலிருக்கும் கடிகாரம் மணி நான்கு அடிக்கிறது. பயந்துகொண்டே, கடைக்குப் போய் நின்றான்! — என்ன கிடைத்திருக்கும் அவனுக்கு? அடியா — வேலையிலிருந்து 'கல்தா'வா? நீங்களே சொல்லுங்கள்!!

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.